சுதேசமித்திரன்

16 ஜனவரி '49 4 அணா



தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னர்குடி.)

சந்தனுதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குண மளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம் 30மாத்ரைசீசா1 ரூ.7

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டிக்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோகவியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வதி த்ரம், ஸ்ரீதன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப் பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லா விதமானபடைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது.எங்கும்கிடைக்கும்.கேட்லாக்இனும் ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்

சக்தி ஆருடம்!

நீலகிரி பாரஸ்டு இலாகா மானேஜர் (Retd.) Sri. சாயிராம் T. V. N. சாமி 30-11-48ல் எழுதுகிருர்:—"தங்கள் ஜோதிடத்தில் எனக்கு அபார மதிப்பு. தங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை."

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. வி. பி. பி. தனி.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?
இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் :	லக்ஷிமி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே, மதராஸ்.

Lovely long hair

100% மருந்து பூர்வமானது: வாசனையுள்ளது. மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்.

விஜயா கெமிகல் & டாய்லட் ஒர்க்ஸ்,
15, கிளெமன்ஸ் ரோட்,
(ராக்ஸிக்குப் பின்புறம்.)
புரசைவாக்கம், மதராஸ் 7.



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைஞ பஜார், சென்னை.

எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

A. B. C. Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்:
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.

கர்பரக்ஷா மாத்திரை

பெண்கள் கர்ப காலங்களில் இதை சாப்பிட்டுவந்தால் எவ்வித கோளாறுமின்றி சுகப்பிரசவமாகும். கர்பச் சிதைவைத்தடுக்கும். நூறு மாத்திரை ரூ. **6—4—0.** ஐம்பது மாத்திரை ரூ. **3—8—0.**

தசமூலாரிஷ்டம்

பிரசவமான பிறகு உடம்பைத் தேற்றிக்கொள்ள இதுபோல் கைகண்ட ஒளஷதம் வேறு கிடையாது. ஹிருதய பலவீனத்திற்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் ஆண்களும் உட்கொண்டால் பரிபூர்ண குணம் கிடைக்கும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. **6—0—0.**

விவரங்களுக்கு:—

ஆரிய வைத்தியன் பி. ஜி. வாரியரின்

ஆரிய வைத்தியாசிரமம், குமரன் வீதி, திருப்பூர்.

பிராஞ்சு: பல்லடம்.

குகன் சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபால் செலவு பிரத்யேகம்.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd.No.2221.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். S.I.R.

ஆனந்த குஸுமாகர லேகியம்

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம், க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும், உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி, பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனும்.

மலையாள மெடிகல் ஹால் (Regd.)

189, வக்கீல் புது தெரு - Post Box No. 27. — மதுரை.

ரூ. 500 இனும்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனுல் நீர் விரும்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனும்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினுல் ரூ. 12.

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. 18.

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

சதி-பதி வாழ்க்கை

விஞ்ஞான ரீதியாக இல்லற வாழ்க்கையின் சிற்றின்பச் சிறப்புக்களை வெகு நுணுக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துப் போதிக்கும் ஒரே தமிழ் நூல்

"மணவாழ்க்கையின் - - மர்மங்கள்"

என்னும் புஸ்தகமாகும். சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கி, கர்ப்பத் தடை முறைகளை நன்கு விளக்கி, மலட்டுத் தனத்தை முற்றிலும் போக்கி, கணவன்–மனைவி வாழ்க்கையை வெகு உன்னதமாக்கி வைக்கும் அத்தனை இரகசியங்களும் பொதிந்த விஞ்ஞான நூல். ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் தவருது படிக்கவேண்டிய அபூர்வ ஔஷதம். மலிவுப்பதிப்பு ரூ. 3/12. பரிசுப்பதிப்பு ரூ. 5/8. தபால் செலவு வேறு. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம்—சென்னை 4.

வீட்டிலேயே வாசனை தைலங்கள் தயாரித்தால் பணம் மிச்சமாகும்: கீழ்க்கண்ட மோஹினி பியூர் செண்டுகளில் ஏதேனும் ஒன்றை தேங்காய் எண்ணெய், மணிலா, ஆமணக்கு அல்லது நல்லெண்ணெயில் சேர்த்தால், மலிவான விலையில் சிறந்த வாசனைத் தைலம் கிடைக்கின்றது. இலவசமாக எண்ணெயை சிவப்பாக்கும் ஆல்கானட் வேர்கள் அனுப்புவோம்.

மோஹினி பியூர் செண்ட் ரகங்கள்.

1.	சம்பக் செண்ட்	ரூ. 2-0.	8.	ரோஜா செண்ட்	ரூ. 1-8.
2.	கியோரா	,, 2-0.	9.	சுரங்கி	,, 1-8.
3.	காஸ்	,, 2-0.	10.	வில்லி	,, 1-0.
4.	போகுல்	,, 1-8.	11.	லோடஸ்	,, 1-0.
5.	ஜாஸ்மின்	,, 1-8.	12.	ஆரஞ்சு	,, 1-0.
6.	கதம்பம்	,, 1-8.	13.	மோதியா	,, 1-0.
7.	ஹேனு	,, 1-8.	14.	கோலோன்	,, 1-0.

அரை அவுன்ஸ் புட்டிகளில. பாக்கிங், போஸ்டேஜ் வி. பி. பி. தனி.

S. PAUL & Co., Perfumers, (Dept. S.W.) 4, Hospital St., Calcutta 13.

பொங்கலுக்கும் பரிசு

உங்களுக்குத் தெரியுமா ?

நாம் மித்திரன் • வாசகர்களுக்கும் மற்றும் பலருக்கும் தேவையான பட்டு சேலைகள் நாங்களே எங்கள் சொந்த கைத்தறியில் தயாரித்து தீபாவளி பரிசு வழங்கி வந்தோம்.

மேலும் அவரவர்களின் சக்திக்கேற்றவாறு அவரவர்கள் விரும்பும் நவீன தினுசுகளிலே ஆர்டரின்பேரில் 5 to 9 Yds வரை குறித்த காலத்தில் தயாரித்துக் கொடுத்தும் வந்தோம்,

இந்த புது ஆண்டு பொங்கலுக்கும் பரிசு வழங்க நிச்சயித்துள்ளோம். இதில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் 24 ரூபாய் மதிப்புடைய கண்கவரக் கூடிய 6 Yds. பட்டு சாரி ஒன்று 12 ரூபாய்க்கு வழங்கப்படும். இதில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் 1949ஞு காலண்டர் பதிவு செய்யப்பட்ட பட்டு கைகுட்டை இனுமாக பரிசளிக்கப்படும். உடனே இதைக்கத்தரித்து சரியான விலாசமுடன் அனுப்பி பரிசு பெற்றுக் கொள்ளவும். M/O அனுப்புவோர் கூபனுடன் M/O ரசீதும் அனுப்பப்பட வேண்டும். போஸ்டு ௳ பாக்கிங் இலவசம்.

பெயர்.................................

ஊர்...................தேதி...........

JOTHI FABRICS,
KOTTAR : S. TRAVANCORE.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசிகரண யந்திரம் இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3.
தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இலலை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏறபடாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவறறைப் போக்கி, தலைவலியைக குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நமபிக்கையிலலையேல தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொறப நரைக்கு ரூ. 2—8—0. அதறகு மேறபட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்,

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

45 வருஷமாகப் புகழும் நற்சாட்சி களும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் திருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனு பானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதி னல் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,

பழனி. (S. I.)

மதனமஞ்சரி

மாத்திரைகள்.

தேக புஷ்டியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி, ரத்த விருத்தியும், தேக புஷ்டியும் அளிப் பது. டப்பா விலை ரூ. 1—4—0.

ரமணவிலாசினி

வாழ்க்கையை நன்கு அனுபவிக்க டப்பி ரூ. 1—4—0.

கர்ப்பாமிருத சூர்ணம்

ஸ்திரீகளின் நோய்களை நீக்கி, புத்திர சந்தானம் பெற உதவியளிக் கும் ஔஷதம். டின் விலை ரூ. 2-8-0.

சேலம் : மாடர்ன் ஸ்டோர்ஸ், முதல் அக்ரஹாரம்.

கோயமுத்தூர் :

T. S. கருப்புசாமிசெட்டியார்ஸன்ஸ்

கேசரியின்

மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய நிவாரணி

மலடு, சங்காதோஷம், கில் வாயு, தூக்கமின்மை, அஜீர் ணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றைக் குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலிய வற்றைக் குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளூயன்ஸா, டைபாய்ட், மலேரியா முதலான ஜுரங் கள் குணமாகும். ஈரல் குலைக் கட்டிகளும் குணமாகும்.

★

விவரங்களுக்கு எழுதுங்கள்:—

கேசரி குடீரம் லிட்.,

ராயப்பேட்டை, மதராஸ் 14.

பிரசுரமான கிருதிகள்

"சுதேசமித்திரன்" வாரப்பதிப் பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப் படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட் டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளி கள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்ய ரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதி கள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.

"சுதேசமித்திரன்"

வாரப்பதிப்பு

✶

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" ஆபீஸ்,

மவுண்ட் ரோட், மதராஸ்.



மங்களகரமான
பொங்கல்
வாழ்த்து !

★

கண்ணுக்கு அழகு
கருத்துக்கு விருந்து
குடும்பத்தினரனைவரும்
கூடிப்பார்க்கவேண்டிய
உன்னதப்படம் !

மாடர்ன் தியேட்டர்ஸின்

ஆதித்தன் கனவு

T. R. மகாலிங்கம் அஞ்சலிதேவி முதலியோர் நடித்தது.

பஸ்மாசுர மோஹினி நடனம்

சுடனே - அன்னம் காமிக்
வளைசல் (கூனன்) ஒய்யாரக் கேளிக்கை
மற்றும் பல அரிய காக்ஷிகள்.

டைரக்ஷன் : T. R. சுந்தரம் B. A. B. Sc. (Leeds)

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம் & மதுரை.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஹு தைமீ 3உ ★ 1949-ஹு ஜனவரிமீ 16உ No. 51

காஷ்மீர் ஓட்டெடுப்பு

காஷ்மீரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க அங்கு நடக்கவிருக்கும் சர்வஜன ஓட்டெடுப்பில் அனுசரிக்க வேண்டிய கொள்கைகள்பற்றி ஐ. நா. கமிஷனின் முயற்சியின்பேரில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் விவரம் சென்றவாரம் வெளியாகியிருக்கிறது.

தற்போது காஷ்மீர் முழுதுக்கும் சட்டபூர்வமான அரசாங்கம் ஷேக் அப்துல்லா சர்க்கார்தான் என்பதை இவ்வுடன்பாடு தெளிவாக அங்கீகரிக்கிறது. பாகிஸ்தான் இவ்வளவு நாளாக அங்கு "ஆஸாத் சர்க்கார்" என்ற பெயரில் ஜோடித்து வந்த கலகக் கூட்டத்துக்கு எத்தகைய அந்தஸ்தும் கிடையாது.

சர்வஜன ஓட்டெடுப்பை நடத்திவைப்பதற்கான ஒரு மேலதிகாரியை ஐ. நா. சங்கம் குறிப்பிடுமாயினும், அவரை அந்த ஸ்தானத்திற்கு நியமிக்கும் அதிகாரம் காஷ்மீர் சர்க்காருக்குத்தான். தமது பொறுப்பை நிறைவேற்றிவைக்க அவருக்கு வேண்டிய அதிகாரங்களை அவர் அந்த சர்க்காரிடமிருந்தே பெற்றுகவேண்டும். கொள்கையளவில், இந்தியாவின் ஆதரவுடன் காஷ்மீர் மக்கள் இவ்வளவு காலமாக வற்புறுத்தி வந்த கட்சிக்கு இது ஒரு விசேஷ வெற்றியேயாகும்.

இதற்கான முன்னேற்பாடுகளைப்பற்றி இவ்வுடன்பாட்டில் குறித்துள்ள கொள்கைகளும் ஒருமுகமான அங்கீகாரம் பெறும். காஷ்மீரில் புகுந்துள்ள பாகிஸ்தான் துருப்புகளும், பாகிஸ்தான் ஏவிவிட்ட மலைஜாதிக் கொள்ளையரும் முதலில் அங்கிருந்து வெளியேறி விடவேண்டும். இதைத் தொடர்ந்து அச்சமஸ்தானத்தில் அமைதி ஏற்பட்டபின், மேற்கொண்டு அங்கு எவ்வளவு இந்தியத் துருப்புகள் இருப்பது என்பதை ஐ. நா. கமிஷனும், சர்வஜன ஓட்டெடுப்பு மேலதிகாரியும் இந்திய சர்க்காரைக் கலந்து கொண்டு முடிவு செய்வர். சமஸ்தானத்தின் பந்தோபஸ்துக்கும், சர்வஜன ஓட்டெடுப்பு நேர்மையாக நடந்தேறுவதற்கும் பாதகம் நேராத முறையிலேயே இம்முடிவு செய்யப்படுமென்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் அச்சமஸ்தானத்துக்கு பாகிஸ்தானின் துராக்கிரமிப்பால் ஏற்பட்ட ஆபத்தை நீக்கவே இந்தியத் துருப்புகள் அங்கு செல்ல நேர்ந்தது. அவ்வாபத்து நீங்கியவுடன் தங்கள் படைகளைத் திரும்ப அழைத்து, காஷ்மீர் மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தங்கள் இஷ்டம்போல் நிர்ணயம் செய்துகொள்ள விடுவதே தங்கள் கருத்தென்பதை இந்திய சர்க்கார் ஆரம்ப முதலே தெளிவாக்கி வந்திருக்கின்றனர். காஷ்மீரிலிருந்து உண்மையில் பாகிஸ்தான் படைகளும், கொள்ளையரும் அடியோடு வெளியேறிய பின்னரே, இந்தியத் துருப்புகள் வாபஸாவதுபற்றி ஐ. நா. கமிஷன் முடிவு செய்யும் என்று எதிர்பார்ப்போம்.

காஷ்மீர் போர் துவங்கியபின், பாகிஸ்தான் துருப்புகளையும் மலைஜாதிக் கொள்ளையரையும் தவிர அத்தரப்பிலிருந்து வேறு பலரும் காஷ்மீரில் குடிபுகுந்திருப்பது பகிரங்கம். இத்தகைய அக்கிரமக் குடியேற்றத்தை பாகிஸ்தான் ஊக்கி வந்திருப்பதற்கான காரணத்தை விளக்கத் தேவை

—அடுத்த பக்கம் பார்க்க

யில்லை. இதே சமயத்தில் காஷ்மீர் பிரஜை களில் பலர் உயிருக்கஞ்சி பக்கத்துப் பிர தேசங்களுக்கு ஓடியிருக்கின்றனர். சர்வஜன ஓட்டெடுப்புக்கு முன், வெளியாரை அப்புறப் படுத்தி, வெளியே சென்ற காஷ்மீர் பிரஜைகள் திரும்ப வசதியளிக்க வேண்டுமென்ற கொள்கையை இவ்வுடன்பாடு வற்புறுத்து கிறது.

ஆனால் இக்கொள்கையை நிறைவேற்றி வைக்க உருவாகியுள்ள முறை துஷ்பிரயோகத் துக்கு இடந்தரக்கூடும். இதற்கென்று இரு கமிஷன்கள் ஏற்படவிருக்கின்றன. ஒன்று பாகிஸ்தான் பிரதிநிதிகளையும், இன்னொன்று இந்தியாவின் பிரதிநிதிகளையும் கொண்டதா யிருக்கும். இதற்குப்பதிலாக ஒவ்வொரு கமி ஷனிலும் இருதரப்புப் பிரதிநிதிகளும் இடம் பெறுவது இவ்விஷயத்தில் நடக்கக்கூடிய புரட்டுகளைக் கூடியவரை தவிர்க்க உதவக் கூடும். எப்படியும் தங்கள் பிரஜைகள் யார் என்று நிர்ணயிப்பதில் காஷ்மீர் சர்க்காரை விட அதிக அருகதையுள்ளவர்கள் யாருமிருக்க முடியாது. எனினும் இவ் விஷயத்தில் அவர்களுக்கு எத்தகைய அதி காரமும் அளிக்காதது இவ்வுடன்பாட்டின் முக்கியக் குறைகளில் ஒன்று.

இன்னொரு குறை பாகிஸ்தான் துருப்புகளும் கொள்ளையரும் காலி செய்யவிருக்கும் பிரதே சத்தின் இடைக்கால நிர்வாகத்தைப்பற்றியது. அவர்கள் நியமித்த, அல்லது அவர்கள் செல் வாக்குள்ளான "அதிகாரிகளே" தற்போது அங்கு நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கவேண் டும். சர்வஜன ஓட்டெடுப்பு நடந்தேற எப் படியும் பல மாதங்களாகக் கூடும். இவ்வளவு காலமும் மேற்குறித்த பிரதேசத்தில் தற்போ தைய நிர்வாகம் நீடிக்க விடுவதெனில் அங்கு நடக்கும் சர்வஜன ஓட்டுப் பதிவு எவ்வளவு நேர்மையாயிருக்குமென்று சொல்லத் தேவை யில்லை. காஷ்மீர் சர்க்காரின் சட்டபூர்வமான அந்தஸ்தை அங்கீகரித்தபின், அக்கிரமமாகப் படையெடுத்தவர்கள் காலி செய்யும் பிரதேசத் தையும் அவர்களுடைய அதிகாரத்தில் ஒப் படைப்பதே முறை. ஆனால் அதற்கான நட வடிக்கையெதையும் குறிக்காததுடன், அப் பிரதேசத்தில் தற்போதைய "நிர்வாகம்" நீடிக்க இடந்தருவதே இவ்வொப்பந்தத்தின் கருத் தெனக் காண்கிறது.

ஓட்டு எடுப்பதுபற்றிய இன்னொரு முக்கிய விஷயம், வாக்குக் கணக்கை எவ்வாறு நிர்ணயம் செய்வதென்பதைப் பொறுத்தது. அதாவது அச்சமஸ்தானம் முழு தும் பதிவாகும் வாக்குகளை மொத்தமாகக் கணக்கெடுத்து அதன் எதிர்காலத்தை முடிவு செய்வதா, அல்லது பிரதேசவாரியாகவோ, அல் லது ஜில்லா வாரியாகவோ கணக்கெடுத்து அந் தந்தப் பகுதியின் எதிர்காலத்தைத் தீர்மானிப்ப தா என்ற விஷயம் தெளிவாகவில்லை. இரண் டாவதாகக் குறிப்பிட்ட முறை கையாளப்படு மாயின், அது காஷ்மீர் சமஸ்தானத்தைப் பிளப்பதிலேயே முடியும். உண்மையில் காஷ் மீரைத் துண்டாடுவதென்ற அடிப்படையில் ஒரு சமரசம் காணலாம் என்பது நெடுநாளுக்கு முன்பே அந்நிய வட்டாரங்களிலிருந்து வெளி யான ஒரு யோசனை. இப்போது அது வேறொரு வழியின் மூலம் காரியகரமாகிவிடுமோ என்று அஞ்சக்காரணமுண்டு. இவ்விஷயத்தில் இந் திய சர்க்கார் வற்புறுத்தியிருக்கக்கூடிய கருத் தின் விவரம் யாதாயினும், காஷ்மீர் மக்கள் அதுபற்றிக் குறைசொல்லச் சிறிதும் இட மிராதென்றே எண்ணுகிறோம்.

(மேல்)

இந்தியாவின் பிரபல நடன நிபுணரான ஸ்ரீ உதயசங்கரும், அவரது மனைவி ஸ்ரீமதி அமலா நந்தியும் சமீபத்தில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்தனர். மாஸ்கோவில் இந்தியத் தூதராக இருந்துவரும் ஸ்ரீ ராஜேச்வர தயாளர் மேற்படி தம்பதிகளுக்கு தமது காரியாலயத்தில் ஒரு உபசாரம் நடத்தினார். வலது பக்கம் கோடியில் நிற்பவர்தான் ஸ்ரீ தயாளர்; உதயசங்கர் தம்பதி இடது ஓரமாக நிற்கிறார்கள்.

(கீழ்)

நாகரிகத்தின் வேகம் எவ்வளவு அபாரமாயிருக்கிறது! ஆட்டோ ஜான்ஸன் என்ற அமெரிக்க நிபுணர் 3-மாதமுள்ள ஒரு அணிலை வளர்க்கிறார். அது அவர் பிடிக்கும் ஸிகாரை ருசிப் பார்க்கிறது! இதை அவர் பல விளையாட்டுகளில் பழக்கியிருக்கிறார்.



இந்தோனேசியச் குடியரசின் தலைவரான டாக்டர் சுகர்ணு தன் மனைவி, குழந்தைகளுடன் வீற்றிருக்கிறார். டச்சுக்காரர் இவரைச் சிறைபிடித்தது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

இன்பம் பொங்குக!

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்:]

★

மார்கழிப் பனியும் மக்களின் பிணியுந்
தீர்ந்தன; பொங்கல் திருநாள் மலர்ந்தது!
கல்வியுஞ் செல்வமுங் காதலும் பொங்குக!
அல்லல் நீங்குக! ஆறுதல் ஓங்குக!
இன்சுவைக் கரும்பும் இஞ்சியும் மஞ்சளும்
செந்நெற் கதிர்களும் செழித்துப் பொங்குக!

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும்' சுரந்திடு மாக!
ஆணும், பெண்ணும் அறிவா லுயர்ந்து
பேணும் வாழ்வின் பெருமை பொங்குக!
பொங்குக பொங்கல்! புதுமைப் பாலுடன்
பொங்குக மங்களம்! பொங்குக இன்பமே!

புது வெள்ளம்

வேம்பு

1

கொடுமுடியிலிருந்து காவிரியைக் கடந்து அக்கரை செல்வதற்காகப் படகில் ஏறி உட்கார்ந்தோம். படகில் என்னையும் நண்பரையும் தவிர வேறு யாரும் இல்லை. வானத்தில் வட்ட முழுமதி வெள்ளியைக் காய்ச்சி உருக்கி வார்த்து வாரி இறைத்துக்கொண்டிருந்தது. சுழலுடன் வேகமாகச் செல்லும் ஆற்றில் அசைந்தாடிப் போகும் படகில் தண்ணீரெல்லாம் வெள்ளியாக மாறிய ரசவாதக் காட்சியை மெய் மறந்து பார்த்து லயித்திருந்தோம். புது வெள்ளத்தின் தனிச் சோபையிலீடுபட்ட நண்பர் மௌனத்தைக் கலைத்தார். ''நல்ல பாட்டாகப் பாடிக்கொண்டே இந்த வேளையில் சென்றால் எவ்வளவு இன்பமாக இருக்கும்'' என்றார்.

நான் குபீரெனச் சிரித்துவிட்டேன். மறுகணம் சிரிப்பு நின்று ''உங்களைப்போலத்தான் சென்ற வருஷம் பாஸ்கரனும் எண்ணினான். இந்த நடுக் காவிரியைக் கேளுங்கள். ஓடும் தண்ணீரைக் கேளுங்கள். அவை பாஸ்கரனின் குழலோசையைப் பிரதிபலிக்கும். மேலே பார்த்து ஏதோ சிரிக்கிறதே, நிலா இதுகூட பேசாமல் கூசாமல் கதை சொல்லும்.'' என்றேன்.

என் நண்பருக்கு ஒன்றும் விளங்கவில்லை. புதிர் போட்டதுபோலிருந்தது அவருக்கு.

''என்னப்பா முழிக்கிறாய்? புல்லாங்குழல் பாஸ்கரனைக் கேள்விப்பட்டதில்லையா? அவனைத்தான் கேள்விப்படவில்லையென்றும் சென்றவருஷம் இதே புது வெள்ள சமயம் படகு கவிழ்ந்ததே, அதைப் பற்றி பேப்பரிலாவது படித்திருக்கவில்லையா?'' என்றேன் வேகத்துடன். தலையை ஆட்டினார் நண்பர்.

2

புங்கனூரில் பாஸ்கரன் பத்து வருடங்களுக்குமுன் சாதாரண மனிதருள் மனிதராகவே இருந்தான். ஆனால் அப்பொழுதே, பொழுது போகாத வேளையில் எப்பொழுதோ செய்யப்பட்ட மூங்கில் குழலிலிருந்து நாதத்தை எழுப்பிக்கொண்டிருப்பான். தன் மகனைப் படிக்கவைத்து எப்படியாவது ஈரோட்டுக்கு அனுப்பி எதனுச்சும் உத்யோகம் பார்த்து வைச்சு சுகமா வாழணும் என்கிறது அவரது ஆவலாக இருந்தது. கிராமத்தில் இந்த மாட்டையும் ஏரையும், பயிரையும் கட்டி அழுது போதும் போதும் என்றாகிவிட்டது. பாஸ்கரனுக்கோ அதிலெல்லாம் பிடித்தமில்லை. சுதந்தரமாகக் கோயில் காளையைப்போல் திரிவான். காவிரி ஆற்றங்கரையில் தண்ணீரில் பரந்து ஓடி நீண்டிருக்கும் வேரில் உட்கார்ந்துகொண்டு குழலூதிக் காலங் கழிப்பான். சும்மா ஊதிக்கொண்டிருந்த மூங்கில் குழாய், குழலாகவே மாறி இனிய நாதத்தைப் பரப்ப ஆரம்பித்தது. ஊருக்குள்ளே வந்து பாஸ்கரன் திண்ணையில் உட்கார்ந்து குழல் ஊத ஆரம்பித்துவிட்டால் ஊர் பிள்ளைகளுக்குக் குஷிதான்! அவனைச் சுற்றி பெருங் கூட்டம் கூடிவிடுவார்கள்.

இவன்தான் உருப்படாமல் தறிதலையாக இருக்கிறான்

என்றால் ஊர் பிள்ளைகளையெல்லாம் ஏன் கெடுக்கிறான் என்று சில பெரியோர்கள் முணுமுணுப்பார்கள். பாஸ்கரன் இவைகளையெல்லாம் லட்சியம் செய்வதில்லை. தன் வீட்டுப் பசு, எருது இவைகளை ஆற்றில் குளிப்பாட்டுவது, தூங்குவது, புல்லாங்குழலூதுவது இதைத் தவிர வேறு எதிலும் அவன் ஈடுபடுவதும் இல்லை.

"நான் இருக்கிறவரையில் தாண்டா இப்படியெல்லாம் உனக்கு வேளா வேளைக்கு எல்லாம் ராஜாமாதிரி நடக்கும், அப்புறம் நீயே உணருவாய்!" என்று நெஞ்சு தழுதழுக்க பாஸ்கரனின் தந்தை அடிக்கடி கூறுவார். மனிதன் மாறுகிறானே இல்லையோ காலம் ஒரே நிலையில் இருப்பதில்லை. மாறிக்கொண்டே ஓடிக்கொண்டே இருக்கிறது.

3

பாஸ்கரனின் குழலில் லாவகம் த்வனித்தது. பூர்வஜன்ம விட்ட குறை தொட்டகுறை என்று கூட ஊரார் மெள்ள மெள்ள பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். அவன் புல்லாங்குழலிலேயே மகுடி வாசிக்க ஆரம்பித்தால் அசல் மகுடியினால் கூட அவ்வளவு ஜோராய் வாசிக்க முடியாது. அந்த வட்டாரங்களில் எந்தக் கல்யாணம் நடந்தாலும் பாஸ்கரனின் குழல் கச்சேரி வைக்கத் தவறமாட்டார்கள். ஆனால் மகுடி மட்டும் வேண்டாம்பா என்று விடுவார்கள். ஏனெனில் ஒரு இடத்தில் இவன் மகுடி ஊதி எங்கிருந்தோ நாகப்பாம்பு ஒன்று கல்யாண வீட்டினுள் வந்து படமெடுத்து ஆட ஆரம்பித்து விட்டது. பாஸ்கரனின் திறமையை எல்லோரும் மிகமிகப் புகழ்ந்தாலும், நாகப்பாம்புக்கு நடுங்காமலிருக்க முடியுமா?

பாஸ்கரனின் மாமன் மகள் பாரிஜாதத்திற்கு குழலோசை மீது ஆசையா, பாஸ்கரனின் மீது ஆசையா எனத் திட்டப்படுத்திச் சொல்ல முடியாதபடி இருந்தது. பெரியவளாகவிட்டபடியால் அவள் சிறுவர்கள், சிறுமிகள்போல் வெளியே வந்து பாஸ்கரனின் குழலோசையின்பத்தில் ஈடுபட முடியாமல் அறைக்குள்ளேயே அடைந்திருந்து காற்றிலே மிதந்துவரும் மெல்லிய கீதத்தையும் மனத்திரையில் இலேசாக நடமாடும் அவன் முகப்பொலிவையும் எண்ணி எண்ணி இன்புறுவாள்; வேதனையும் மெள்ள மெள்ள தோன்றி மறையும்.

'முறைப் பெண்' என்பார்களே அதன்படி பாரிஜாதம் பாஸ்கரனின் முறைதான். பாஸ்கரனுக்கு இதிலெல்லாம் ஏது நினைவு! அவனது களங்கமற்ற இதயம் கலையொன்றிலேயே நினைவாக இருந்தது. இந்த உலகம் ஈடுபடும் இன்பப் பொருளிலேயே இனியபொழுதுபோக்கிலேயோ, ஆடம்பர அழகிலேயோ மனதைப் பறிகொடுக்கவில்லை.........குழல்தான் அவன் உயிர்.

முன்பு முணுமுணுத்துக்கொண்டிருந்த அவன் தந்தை பாஸ்கரனுக்குக் கச்சேரி மூலம் ஏதோ வர ஆரம்பித்ததைக் கண்டவுடன் முணுமுணுப்பு நின்றது. ஆனால் அவர் பூராவும் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. பாஸ்கரனின் துரதிர்ஷ்டத்தை என்னவென்பது? கோவைஜில்லா பூராவும் மக்களை அல்லல்படுத்திய பிளேக் பாஸ்கரனின் தந்தைக்கும் கண்டது; கண்ட பத்தாம்நாள் இறந்தார்.

பாஸ்கரனின் துக்கத்தை எடுத்துச் சொல்ல முடியாது. குடும்பத்தில் நெருங்கி ஒட்டிக்கொண்டிருந்தவன்போல் விம்மி விம்மியழுதான். இனி என்ன செய்வது என்ற எண்ணத்தில் மனது ஆழ்ந்தது.

நல்லவேளையாக இவன் மாமா, முன்பெல்லாம் இவன் மீது அலட்சியமாயிருந்தவர் திடீரென பரிவு காட்டினார். பாஸ்கரனின் பெயரும் புகழும் ஓங்குவதைக் கண்டும், இன்னும் பிரபலமாக அவன் வருவான் என்பதைத் திட்டமிட்டுக்கொண்டும் தன் சம்ரக்ஷணையில் வைத்துக்கொள்ள முடிவு செய்தார்.



பாரிஜாதத்தையும் அவனுக்குக் கட்டிக்கொடுத்துவிடும் எண்ணமும் பலமாக இருந்தது அவருக்கு."

[இதற்குள் நாங்கள் ஏறியிருந்த படகு கரையை அடை-

தது. கதை அவ்வளவுதானா? என்றார் நண்பர். "ரொம்ப நன்றாக இருக்கிறது. கதை இல்லை ஓய்......கதை இல்லை.,... நிஜமாக நடந்தது.......இன்னும் துக்ககரமான பின் பகுதியையும் கேளுங்கள்,''—என்று இருவரும் ஆற்றங்கரை வெண் மணலிலேயே சிறிது நேரம் உட்கார்ந்தோம்.]

கிளிபோன்ற பாரிஜாதத்தின் குலுங்கும் அழகை அவன் கண்டதில்லை. அசந்து நின்றுவிட்டான். கிளிக் கூண்டுக் கருகிலேயே வந்துவிட்டோமே என ஆச்சர்யப்பட்டான்.

உலகம் தெரிந்தது அவனுக்கு. இனி குழல்மட்டும் தன் உயிரல்ல. குழலின் இனிய இசையைப்போன்ற அழகு நிரம்பிய பாரிஜாதத்துக்கும் பங்கு உண்டு என முடிவுசெய்தான். நாளாக ஆக வளரும் கிளி தன்னிடம்தான் நிச்சயம் ஒப்படைக்கப்படப்போகிறது என அறிந்தவுடன் பாஸ்கரனின் உடலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அதிலிருந்தே பாஸ்கரனின் வாசிப்பில் பிரமாத பொலிவு ஏற்பட்டது. நேரம் போவது தெரியாமல் ஊதுவான். மக்களும் சளைக்காமல் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அந்த வருஷம் குடகில் நல்ல மழை. இங்கும் பலத்த மழைதான். காவிரி இரு கரையும் அணைய ஓடிக்கொண்டிருந்தது. பெரும் பெரும் வைக்கல் போர்களும், மரங்களும் வெள்ளத்தில் அடித்து வரும்.

அந்தப் புது வெள்ளத்தைப் புது உணர்ச்சியுடன் பாரிஜாதமும், பாஸ்கரனும் ரஸித்து ரஸித்து இன்புற்றது எப்படி வார்த்தையால் கூறி விளக்குவது?

4

பௌர்ணமியன்று நாமக்கல் பாறையில் பெரிய கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல் நாளே, நாள் நன்றாக இருந்தபடியால் கிளம்பிப்போகலாம் என பாஸ்கரனின் மாமா கூறி விட்டார். பாரிஜாதத்துக்கும் உள்ளுக்குள்ளேயே பெரும் ஆசைதான் தானும் போகவேண்டுமென்று. ஆனால் மணமாகாது அவர் கூடப் போனால் ஊர் வம்பளக்குமே எனப் பயந்து சும்மா இருந்துவிட்டாள்.

ஆற்றிலே சிறிது வெள்ளம் தணிந்திருந்தாலும், வேகமும் இழுப்பும் சுழலும் குறையவில்லை. நான்கைந்து நாட்களாக படகு ஓட்டாதிருந்த படகோட்டிகள் அன்றுதான் மீண்டும் ஓட்டத் தொடங்கியிருந்தனர். பாஸ்கரனுடன் நான்கைந்து தோழர்கள் கிளம்பினார்கள்.

பக்க வாத்யக்காரர்கள் நேரே நாமக்கல்லிலேயே வந்து சேர்ந்து விடுவார்கள்.

படகுக்குத் தேவையான ஆட்கள் கிடைத்துவிட்டார்கள். பௌர்ணமிக்கு முதல் நாளாதலால் முழுமதி வானத்திலே காய்ந்துகொண்டிருந்தது. அந்த நிசப்தமான வேளையில் 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் ஓடியது ஆறு; 'சளக் சளக்' என்ற துடுப்புச் சப்தத்தைத் தவிர வேறு ஒலியே எழவில்லை. பாஸ்கரனுக்கு வட்ட மதியையும், ஓடும் நதியையும் கண்டவுடன் உற்சாகம் பிறந்துவிட்டது. குழலூத ஆரம்பித்துவிட்டான். "மகுடி மகுடி" என்று நண்பர்கள் உற்சாகத்துடன் கூவினர்.

மேலும் ஆற்றின் நடுவில்,படகில் மகுடி வாசித்தால் எங்கே நாகம் வரப்போகிறது என்ற துணிச்சலுடன் பாஸ்கரன் ஊத ஆரம்பித்தான். ஆகா... விளக்கணையும்போதல்லவா ஒளி இன்னும் சுடர் விட்டுப் பெரிதாக எரிகிறது.

அன்றும் அவன் வாசித்தது பேரின்பமாக இருந்தது. இலக்கியத்திலும், புராணத்திலும் மகா புருடர்கள் வாசித்தது பற்றிக் கேள்விப்பட்டோம். ஆனால் அன்று அந்த வாசிப்பு-இனிமை—அழகு—

படகோட்டியும் குழலின்பத்தில் மெய்மறந்து, ஆற்றின் இழுப்புக்கு எதிர் துடுப்புப் போடுவதில் உண்டான அலுப்பையும் அறியாது இருந்தான்.

மகுடி கொடுக்கும் ஒலியைப் போன்ற சப்தத்தை நாம் வேறு எங்கு இவ்வளவு தைர்யமாகக் கேட்க முடியும் என்று நண்பர்கள் புகழ்ந்தனர். பாஸ்கரனை என்ன சொல்லிப் புகழ்வது என்றே தெரியவில்லை அவர்களுக்கு.

படகு நடு ஆற்றை நெருங்கிக்கொண்டிருந்தது.

'உஸ்...உஸ்' என்ற ஒலி கேட்டது. நண்பர்கள் கூர்ந்து கவனித்தனர். படகின் ஓரமாக தலையெடுத்து அழகாக ஆடும் நாகம். அதனது படத்திலே வெண்மதியன் வெள்ளிக்கிரணம் பற்று பளிச் பளிச் என்று மின்னியது.

'அய்யோ' என்று கூவிவிட்டனர் வீராதி வீர நண்பர்கள்.

பாஸ்கரன் மெள்ள பார்த்தான். மகுடியை நிறுத்தவில்லை.

'ஆனால், இசையின்பத்தில் ஈடுபடக்கூடிய பொறுமையுள்ள நண்பர்கள் உண்மை ரஸிகர்களாக இல்லாததால் ஆபத்தைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. இங்கும் அங்கும் எழுந்து ஒதுங்கினர். குழல்

அ. இ. பால்கன் ஜீ பாரி மகாநாட்டின் ஆதரவில் சமீபத்தில் டில்லியில் நடந்த குழந்தைகள் காட்சியை கவர்னர் ஜெனரல் ராஜாஜி திறந்துவைத்தபோது எடுத்த படம்.

வாசிப்பு தடைப்பட்டது, மெய் மறந்து ஆடிய பாம்பு சீறியது.

அவ்வளவுதான், நண்பர்கள் நாகம் இருந்த பக்கத்தைவிட்டு எதிர் பக்கம் ஓடினார்கள்.

நடு ஆறு. துடுப்புக்கு எட்டாத ஆழம்—வேகமல்லவா அங்கு. படகுக்காரன் கூவினான். படகு ஆடியது, குலுங்கியது, தடுமாறியது. ஒரு கணம் விவரிக்க முடியாத அளவு அல்லோலகல்லோலமாகியது. மறு க்ணம் பெருஞ்சுழலில் படகு கவிழ்ந்தது.

'ஹோ' என்று உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் இட்ட ஓலம், திசையெல்லாம் பரவியது.

5

நாகம் எப்படி வந்ததோ சொல்ல முடியாது. வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட பாம்பு தப்பிக்க படகில் ஏறி இருக்கலாம்.

ஆனால் படமெடுத்த நாகத்துக்கு இவர்கள் அஞ்சாதிருந்திருந்தால் பாஸ்கரன் லாவகமாக அதை அடக்கி இருப்பான் தனது திறமையான நாதத்தால்.

உயிரின் கடைசி ஓலம் ஒரு கரைக் கிராமத்துக்கு எட்டியது. கிராமமே திரண்டு வந்துவிட்டது.

படகுகளுடன், வலைகளுடன் திறமையான நீச்சலாட்களுடன் பாஸ்கரனைத்தேட ஆள் விட்டார் மாமா.

அய்யோ, அய்யோ என அவர் அலறியது இன்னும் என் காதில் ஒலிக்கிறது

பயங்கரமான ஓடும் புது வெள்ளத்தின் சுழலில் புத்துணர்ச்சி பொங்கப் பாடிய பாஸ்கரனின்—ஏன் மற்றவர்களின்—உடலை இலேசில் கண்டு பிடித்துவிட முடியுமா?''

[நண்பர் பெருமூச்சுவிட்டார். அவர் கண்களில் நீர்தளும்பியது. பாரிஜாதம் என்ன ஆனாள் என்று வரண்ட குரலில் கேட்டார்.]

என்ன ஆனாள்? சிறிது நாள் புது வெள்ளத்தின் சுழலையும், பேரொலியையும் கண்டு பேயடித்தவள்போல் கரையிலேயே காலங்கழித்தார்கள்.

புது வெள்ளம் வடிந்தது. மனித சுபாவம்தானே. வருத்தமும் மாறி இருக்கலாம்.

———



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

ஒருவன் குடியிருக்கும் வீடு என்றும் ஒன்றுபோல் இருக்கிறதா? நாளடைவில் பழமை அடைகிறது. மேல் கூறை சுவர், தரை எல்லாம் ஜீரணம் ஆகிக் கொண்டே வருகின்றன. அப்பொழுது சொந்தக்காரன் என்ன செய்கிறான்? அதை அழித்துப் புதிய வீட்டை நிர்மாணம் செய்கிறான். அல்லது அதைவிட்டு விட்டு உறுதியான புதியதொரு வீட்டிற்குப்போகிறான். புதிய வீடு புகுதலை 'கிருகப்பிரவேசம்' என்று சொல்லித் தன் பந்துமித்திரர்களுடன் சந்தோஷமாகக் கொண்டாடுகிறானேயொழிய வருத்தப்படுவதில்லை. அவ்வாறே நாம் சிலநாள்கள் உடுத்திக்கொண்ட உடை அழுக்கடைந்து போகிறது. நைந்து கிழிந்து போகிறது. அப்பொழுது பழைய உடையைக் களைந்து புது ஆடையை அணிகிறோம் அல்லவா?

தீபாவளியின்போது புது உடை அணிய எவ்வளவு மகிழ்ச்சி கொள்கிறோம். தாமும் தம்மைச் சார்ந்தவர்களும் புது உடை உடுக்கக் கண்டவர் மகிழ்ச்சிகொள்ளாமல் இருக்கமுடியுமா? அச்சமயத்தில் ஒருவன் வருந்துவது புதுமை இல்லையா? இதே போன்ற நிகழ்ச்சி மரணத்தால் உயிருக்குச் சம்பவிக்கும்பொழுது வருந்துவது எதற்கு? 'மரணத்தின் பொருளைக் கேள்' என்று கண்ணன் சொல்கிறார்.

பீறும் பழம்புடவை
 பேணாது விட்டொருவன்
வேறு புதுப்புடவை
 மேவுதல்போல்—ஈறில் அவன்
முத்து டம்பை விட்டு
 முதிராது வேறு வரும்
புத்துடம்பைச் சேரும் புகுந்து.

10

புது உடை அணிய வருத்தமேன்?

★

(இ-ள்) ஒருவன்—, பீறும் பழம் புடவை—கிழிந்துபோன பழைய வஸ்திரத்தை, பேணாது விட்டு—உபயோகிக்காமல் கைவிட்டு, வேறு புது புடவை மேவுதல் போல்—வேறு ஒரு புது வஸ்திரத்தை அணிந்துகொள்வது போல, ஈறில் அவன்-முடிவில்லாத ஜீவாத்மா, முத்து உடம்புவிட்டு—முதிர்ந்துபோன (கிழத்தனங் கொண்ட) உடம்பை விட்டு, முதிராது வேறுவரும் புத்துடம்பை-பழமையடையாது வேறாகவரும் புதிய உடம்பை, புகுந்து சேரும்—சென்று அடையும்.

2
வாஸாம்ஸி ஜீர்ணநியதா விஹாய
3
நவாநிக்ருஹ்ணாதி நரோபராணி
2
ததா ஸரீராணி விஹாய ஜீர்ணநி
அந்யாநி ஸம்யாதி நவாநி
3
தேஹீ.

(இ-ள்) நர:—மனிதன், யதா—எப்படி, ஜீர்ணநி—கிழிந்த, வாஸாம்ஸி விஹாய—வஸ்திரங்களை விட்டு, அபாரணி நவாநி—வேறான புதியவைகளை, க்ருஹ்ணாதி—கிரஹிக்கிறானோ, ததா—அப்படியே, தேஹீ—ஜீவாத்மா, ஜீர்ணநி—பழகிக் கெட்டுப்போன சரீராணி-உடம்புகளை, விஹாய-விட்டு, அந்யாநி நவாநி—வேறு புதிய உடம்புகளை, ஸம்யாதி—அடைகிறான்.

அர்ஜுனா! உனக்குப் பூஜ்யரான ஆசார்யர்கள் பாட்டன்மார்களுக்கு மரணம் வந்தால் என்ன? பழைய கிழத்தனமான உடம்பு போய் இளமைக்கிருப்பிடமான புதிய உடம்பு உடனே அவர்களுக்கு வந்துவிடும். பழைய உடை போய்ப் புதிய உடையை ஒருவன் பெறுவது போலத்தானே அவர்களுக்கு அம்மரணம்! ஏன் கவலை? என்று கிருஷ்ணன் சொல்லும்போது அர்ஜுனன் போரில் வந்திருந்தோர் ஏந்தியிருந்த வாள், வேல், ஈட்டி, வில், அம்பு முதலிய ஆயுதங்களைப் பார்க்கிறான். உயிரைப்பற்றிய கவலை பின்னும் அவன் மனதில் எழுகிறது. காலில் முள்தைத்த வேதனை தாங்காமல் இறந்து போவோரும் உலகில் இருக்கிறார்கள். போர்வீரன் மார்பில் ஆழப்பதியும் ஈட்டி உடலில் எங்கெங்கோ மறைந்திருந்த ரத்தத்தைக் கொண்டுவந்து வெளியே பீறிட்டு அடிக்கச்செய்கிறது. ஆயுதத்தால் சிப்பாயின் மண்டையில் ஓங்கி விழுந்த அறை மறைந்து கிடந்த மூளையை நிலத்தில் சிதற வைக்கிறது. கத்தியால் அறுப்புண்ட குறை உடலும் அவயவமும் நெடுநேரம் ஆடுகின்றன. மரணத்தின்போது ஏற்படும் இத்தனை வேதனைகளையும் உயிர் அடையாமல் தப்பிவிடுமா? எத்தனை ஆயுதங்கள்? எத்தனை விதமான ஆயுதங்கள்! இவை அனைத்திற்கும் உயிர் தப்பமுடியுமா? என்று சந்தேகமும் கலக்கமும் அர்ஜுனனுக்கு எழுகின்றன. ஒன்று உடலைப்பற்றி, அதைப் பரிகரித்தால் உயிரைப்பற்றி

அதைப் பரிகரித்தால், பின்னும் உடலைப்பற்றி என்று மாறிமாறிக் கலக்கம் வருகிறது. நெடுநாளாக நம்மிடையே ஊறிப்போயிருக்கிற விபரீத உணர்வு எளிதில் நீங்குமா? நீக்க முயன்றாலும் மாறி மாறிக் கலக்கம் வருவது இயற்கை தானே? அர்ஜுனனுக்கு, முன்னே ஜீவாத்மாவின் தன்மையை கிருஷ்ணனால் சொல்லக் கேட்டும் ஆயுதங்களைக் கண்டபோது அவனுக்கு மறுபடியும் உயிரைப் பற்றிக் கலக்கம் வந்தது. அதையறிந்து கண்ணன் மேலும் சொல்லுகிறார்.

ஆயுதங்கள் ஆங்கிவனைச்
சேதியா அன்னவகை
தீயும் அவனைத் தெகியாது—
பாயும்
சலத்தாறு மற்றவனைத்
தான்கரைக்க மாட்டாது
உலர்த்தாது மாருதமும் உற்று.

(இ-ள்) இவனை-இந்த ஜீவாத்மாவை, ஆயுதங்கள் சேதியா—ஆயுதங்கள் வெட்டமாட்டா, அன்னவகை தீயும் அவனைத் தெகியாது—அவ்வாறே ஜீவாத்மாவை நெருப்பும் சுடாது, பாயும் சலத்தாறு—ஓடும் நீருடைய நதி, அவனை தான் கரைக்கமாட்டாது—அந்த ஜீவாத்மாவைக் கரைக்க முடியாது, மாருதமும்—காற்றும். உற்று உலர்த்தாது—(அவனை) அடைந்து உலர்த்தமாட்டாது.

2 3
நைநம் சிந்தந்தி ஸஸ்த்ராணி
3
நைநம் தஹதி பாவக:
3
நசைநம் க்லேதயம் த்யாபோ
நஸோஷயதி மாருத:

(இ-ள்) சஸ்த்ராணி—ஆயுதங்கள், ஏநம்—இந்த ஜீவாத்மாவை, நசிந்தந்தி—வெட்டுகிறதில்லை, ஏநம்—இந்த ஆத்மாவை, பாவக:—அக்கினி, நதஹதி-கொளுத்துகிறதில்லை, ஏநம்—இதை ஆப:—ஜலங்கள், நக்லேதயந்தி—நனைக்கிறதில்லை, ஏநம்-இவ்வாத்மாவை, மாருத:—காற்று, நசோஷ்யதி—உலர்த்துகிறதில்லை.

ஆயுதங்களின் வலிமையை நினைத்து, 'அவைகள் ஜீவாத்மாவை மரண காலத்தில் ஊறு செய்யாமல் இருக்குமா?' என்று அர்ஜுனன் கலங்கினான். உலகின் நிலையையே அடியோடு மாற்றவும் அழிக்கவும் வல்ல ஐம்பெரும் பூதங்களே ஆத்மாவை எந்த வகையிலும் பாதிக்க இயலாதபொழுது ஆயுதங்கள் அவனை என்ன செய்யமுடியும்? என்று கண்ணன் சமாதானம் கூறினார். 'இத்தகைய அற்புதவஸ்து எவ்வாறிருக்க முடியும்? இருந்தால் அதன் உருவம் எப்படி இருக்கும்? அதைப் பிரத்தியட்சப் பிரமாணத்தால் அறிய முடியாததை நம்பி யுத்தத்தை எப்படி மேற்கொள்வது?' என்று அர்ஜுனன் மேலும் சிந்திக்கவாரம்பித்தான். அதனால் கண்ணன் பின்னும் ஆத்மாவின் இயல்பைச் சொல்லலானார்.

அவ்வவற்றால் ஏதும்
அழியான் இவன் என்றும்
எவ்விடத்தும் தாணுவாய்
ஏய்ந்தசைவற்று இவ்வகை
[என்று
ஆதும் தெரியான் அறிவு
அறிவான் என்று அறிந்து
யாதும் துயரேல்
நீ இங்கு.

(இ-ள்) இவன் ஜீவாத்மா, அ அவற்றால் ஏதும் அழியான்—யாவற்றாலும் எந்த வகையிலும் அழியமாட்டான், என்றும் எவ்விடத்தும்—எக்காலத்திலும் எல்லா இடங்களிலும், தாணுவாய் நிலையாய், அசைவு அற்று ஏயந்து-சலனம் இல்லாதவனாய் பொருந்தி, இவகை என்று ஆதும்தெரியான்-(உருவம் நிறம்) இவற்றால் இன்ன தன்மையன் என்று தெரிந்து கொள்ளப்பட மாட்டாதவன், அறிவு அறிவான்—(ஐம் பொறி மனம் இவற்றாலறியப்படாது) ஞானத்தால் அறியப்படுவான். என்று அறிந்து—என்பதை (வேதப்பிரமாணத்தால்)அறிந்து. நீ இங்கு—நீ இப்போர்களத்தில், யாதும் துயரேல்—சிறிதும் வருந்தாதே.

ஜீவாத்மா மனதிற் கெட்டாதவன். ஐவகை இந்திரியங்களின் ஆதீனத்தில் இருந்து வரும் மனம் போனவழிச் செல்லும் மனிதர்கள் ஆத்மாவை எப்படிக் காணமுடியும்? கண்டவர் அதன் ஸ்வரூபத்தைச் சொன்னாலும் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? ஞானிகளுக்குப் பிரத்யட்சமாகவிருக்கும் வஸ்து அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் பலருக்குப் பிரத்தியட்சமாகப் புலப்படாவிட்டால் இல்லாமல் போய்விடுமா? ஜீவாத்மாவை அறிவதற்கான நிலையை அடைவதற்குரிய சாதனங்களைப் பயிலுமுன் ஒருவன் ஜீவாத்மா விஷயத்தில் வேதத்தையே பிரமாணமாகக் கொள்ள வேண்டும். ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவத்தால் அறிந்து சொன்ன ஆன்றோர் வார்த்தைகளை நம்பியே சாதனங்களில் இறங்க வேண்டும்.

மனத்தின் வசப்பட்டிருப்பதால் அர்ஜுனா! உன்னால் அதை இத்தகையது என்று காணவோ, அறியவோ முடியாது. நான் சொன்னாலும் பிரத்யட்சானுபவத்தால் நீ கிரகித்துக்கொள்ள முடியாது.! கண்ணாற் காணப்படாதவன்: சிந்தைக் கெட்டாதவன்; முக்காலங்கிலும் எங்கும் நிலையாய் உள்ளவன்: என்று ஆத்ம விஷயத்தில் வேதம் கூறும் வார்த்தைகளையே நம்பு. 'மரணங் காரணமாக மனதில் வரும் கவலையை விட்டொழி' என்று கண்ணன் சொன்னபோதும் அர்ஜுனன் போரை மேற்கொள்ளவில்லை. மேலும் தயங்கவே செய்தான். ஜீவாத்மா விஷயத்தில் வேதம் கூறும் வார்த்தைகளில் நம்பிக்கையில்லாவிட்டாலும் போர் செய்ய செய்யவேண்டியது உனக்கு அவசியம்' என்று கண்ணன் பின்னும் காரணங் கூறலானார்.

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்



35

அக்கினி---பரீட்சை

★

ஆதனூர்ப் புலைச்சேரியில் இருந்த புலையர்கள் ஊரார் மானியமாக விட்டிருந்த நிலம் முதலான வருவாயைக் கொண்டு ஜீவனம் செய்து வந்தார்கள். இவர்கள் ஊர்ப்புலைமையாகிய குடித்தொழிலில் நிலைத்து வழிவழியாக உழவுத் தொழில் செய்து வந்தனர். இவர்களுக்கிடையே தோன்றிய நந்தனர் விசேஷமான இயற்கையறிவோடு பிறந்து ஓதாதுணர்ந்த உத்தம ஞானிகளில் ஒருவராக வளர்ந்தாரென்று பெரிய புராணம் குறிப்பிடுகிறது:

பிறந்(து) உணர்வு தொடங்கிய
பின்
பிறைக்கண்ணிப் பெருந்தகை
பால்
சிறந்த பெருங் காதலினல்
செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும் அயல் நினைவின்றி
வருபிறப்பின் வழிவந்த
அறம்புரி கொள் கையராயே
அடித்தொண்டின் நெறிநின்ருர்

[பிறைக்கண்ணிப் பெருந்தகை பால்-சிவபெருமானிடம்.]

சிவாலயங்களிலுள்ள பேரிகைகளுக்குத் தோலும் வாரும் கொடுத்து வந்தார்; வீணைக்கும் யாழுக்கும் நரம்புகளும், சிவார்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்து வந்தார். கம்பிகளுக்குப் பதில் அந்தக் காலத்தில் வீணைகளிலே சுரஸ்தானங்களுக்கு ஏற்ற வகையில், நரம்புகள் பொருத்தப் பெற்றன என்றும் வீணைக்கும் யாழுக்கும் வேற்றுமையுண்டு என்றும் தெரிகிறது:

நேர்வைத்த வீணைக்கும்
யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும்
தேவர்பிரான் அர்ச்சனை கட்(கு)
ஆர்வத்தி னுடன்கோரோ—
சனையும் இவை அளித்துள்ளார்

[நிலை-சுரஸ்தானங்கள். நிலை வகை—சுரஸ்தானங்களுக்கு ஏற்ற வகை. சேர்வுற்ற— பொருந்திய. தந்திரி—நரம்புகள்.]

இந்தவிதமாகப் பணிவிடை செய்து சிவாலயங்களின் வாசற்புறத்திலே நின்று, அன்பின் மிகுதியால் மெய்ம்மறந்து ஆடுவார் பாடுவார்.

அன்பினல் அடியேன்
ஆவியோ(டு) ஆக்கை
ஆனந்த மாய்க்கசிந்(து)
உருக

என்ற மணிவாசகப்பெருமானின் அனுபவம் ஆதனூர்ப் புலைப்பாடியிலுள்ள நந்தனருக்கும் கிடைத்துவிட்டது.

பாடவேண்டும் நான்
போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்(து)
உருகி நெக்கு நெக்(கு)
ஆடவேண்டும் நான்

என்ற புலமை நிரம்பிய மணிவாசகப் பெருமானின் வேண்டுகோள் இந்த ஆதனூர்ப் புலையருக்கு இயற்கையாகவே சித்தியாகிவிட்டது.

திருப்புன்கூர் என்ற க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டிருந்த சிவபெருமானுக்குப் பணிசெய்ய வேண்டுமென்னும் விருப்பம் ஒரு சமயம் நந்தனருக்கு உண்டாயிற்று: உடனே ஆதனூரிலிருந்து புறப்பட்டுப்போய், அந்தக் கோவில் வாசலை அடைந்து,அங்கே நின்று பெருமானை நேரே கும்பிட வேண்டுமென்று ஆசைப்பட்டார் நந்தனர். அந்த ஸ்தலத்திலே நந்தி மிகவும் பெரிதாயிருந்ததால், இவர் சுவாமி தரிசனம் செய்வதற்கு அது இடையூருயிருந்தது. ஆனல், அன்பர் விரும்பும்வண்ணம் அருள்புரியும் பெருமான் தம்முன்னுள்ள ரிஷபதேவரை விலகும்படி கட்டளையிட்டுத் தரிசனம் அளித்தாராம். ஆனந்தம் அடைந்த அடியவர் அந்த ஸ்தலத்தில் ஒரு பெரிய பள்ளத்தைக் கண்டு ஒரு பெரிய குளமாக வெட்டிப் பலருக்

கும் பயன்படச் செய்தார். திருப்புன்கூர்ச் சிவபெருமானைச் சிவலோகன் என்றும் சிவலோக நாதன் என்றும் போற்றுகிறார்கள், அப்பர் சுவாமி தேவாரத்தில்,

திருப்புன்கூர் மேவிய

சிவலோகனை

என்று பாடியிருக்கிறார்.

அப்பால் பலவேறு திருப்பதிகளுக்கும் போய்ப் போய் அங்கங்கே அவசியமான தொண்டுகளைச் செய்து வந்தார்.

வேண்டுவார்க்கு வேண்டுவதே

ஈவான் கண்டாய்

என்று அப்பர் பாடிய பெருமான் நந்தனாருக்கு அங்கங்கே காட்சி கொடுத்தருளினார்.

நந்தனார் திருப்புன்கூரில் ஒரு பள்ளத்தை— அதாவது ஓர் இயற்கை நீர் நிலையை— பெருங் குளமாகத் தோண்டி வைத்தாரல்லவா? இந்தப் பொய்கையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில் பாடியிருக்கிறார். பொய்கையில் திரள்திரளாக மலர்ந்திருந்த செந்தாமரைகளுடன் சேர்த்துப் பொய்கையையும் திருப்புன்கூர்ச் சிவலோக நாதனையும் பாடியிருக்கிறார்:

பொற்றிரள்மணிக் கமலங்கள்

மலரும்

பொய்கைசூழ்திருப் புன்கூரு

ளானே!

[பொன் திரள் மணிக் கமலங்கள்-பொன் மயமாகத் திரண்டு திகழும் அழகிய செந்தாமரைகள்.]

இத்தகைய பக்தருள்ளத்திலே திடீரென்று சிதம்பர தரிசனம் செய்ய வேண்டுமென்று ஆசை பிறந்தது. சிவ ஸ்தலங்களுக்கெல்லாம் மேலான தில்லையில் கருணை நிதியான சபாநாயகர் செய்தருளும் ஆனந்த நடனத்தை எண்ணியெண்ணி, அன்றிரவு முழுவதும் இவர் உறங்கவே இல்லை.

பொழு புலர்ந்தது. சிதம்பரப் பித்தோ உள்ளத்தைவிட்டு நீங்கவில்லை. 'அங்கே போனாலும் கோவிலுக்குள்ளே போய் அந்த நடனம் காணும் பாக்கியம் இந்தப் பிறவிக்கு இல்லையே' என்ற நினைப்பும் தோன்றியது:

'ஒன்றிஅணை தருதன்மை

உறுகுலத்தோ(டு)இசைவில்லை'

என்(று) 'இதுவும் எம்பெருமான்

ஏவல்' எனப் போக்கொழிவார்,

நன்றும் எழும் காதல்மிக

'நாளைப்போ வேன்!' என்பார்

[ஒன்றி அணைதரு தன்மை-உட்புகுந்து நெருங்கிப்போய்த் தரிசனம் செய்யும் பேறு. உறுகுலத்தோடு-எனக்குப் பொருந்திய இந்தக் குலத்திற்கு. ஏவல்-(இங்கே) திருவருள். நன்றும்-பெரிதும்.]

'இதுவும் அவர் திருவருள்தான்!' என்று யாத்திரையை நிறுத்தியும் ஆசை மேலும்மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. அந்த ஆசையில் 'ஆலயப் பிரவேசம் தமக்குக் கிடையாதே' என்பதையும் மறந்து 'நாளைப் போவேன், நாளைப் போவேன்!' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டிருந்தார். இதனால்தான் இவரை 'நாளைப் போவார், என்றும், 'திருநாளைப் போவார்' என்றும் அழைக்கிறார்கள்.

இந்த விதமாய்ப் பல தினங்கள் கழிந்தன. ஆசை பெருகிப் பெருகி ஒருநாள் இவரை ஆதனூரிலிருந்து சிதம்பரத்தை நோக்கிச் செலுத்தி விட்டது. தில்லையின் எல்லையடைந்ததும் வேள்விச் சாலைகள்,



வேதம் ஓதும் இடங்கள், மடாலயங்கள் முதலியவற்றைக், கண்டார். அந்த வைதிக நிலையங்களை நெருங்க அஞ்சித் தில்லையின் எல்லையை மட்டும் இரவும் பகலும் வலம் செய்துகொண்டிருந்தாராம். செய்து செய்து ஒருநாள், 'திருக்கூத்தை எப்படித்தான் கண்டு கும்பிடுவதோ?' என்று எண்ணியெண்ணி, நைந்து நைந்து அயர்ச்சியோடு உறங்கி விட்டார்.

அப்பதியின்
மதிற்புறத்தின்
ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய்
வளர்ந்தோங்க
உள்ளுருகிக்
கைதொழுதே.

[ஆராத-அடங்காத: தெவிட்டாத.]

வலம் வந்தபின் ஓர் இரவில் களைத்துப்போய் உறங்கிப் போகிறார், 'எவ்வண்ணம் நடனம் கும்பிடுவது?' என்று எண்ணிய வண்ணம்:

இவ்வண்ணம் இரவு பகல்
வலம்செய்(து) அங்(கு) எய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழிந்த
அடித்தொண்டர் அயர்வெய்தி,
'மைவண்ணத் திருமிடற்றார்
மன்றில்நடம் கும்பிடுவ(து)
எவ்வண்ணம்?' என நினைத்தே,
ஏசறவி னொடும்துயில்வார்.

[எய்தரிய அவ்வண்ணம்-போக இயலாத அந்நிலை, நினைந்து அழிந்த-நினைத்து மனமழிந்த. அடித்தொண்டர்-திருவடிக்குத் தொண்டரான நந்தனார். அயர்வு எய்தி-சோர்வு அடைந்து. மைவண்ணத் திருமிடற்றார்—'நீலகண்டம்' என்று சொல்லப்பெறும் கழுத்தை யுடைய சிவபெருமான். மன்றில்—சபையில். ஏசறவு-துக்கம்.]

நந்தனார் கனவிலே நடராஜா புன்சிரிப்போடு தோன்றி, 'நீ



வந்தவர்:—என்ன செட்டியார். சௌக்கியமா? பார்த்து ரொம்ப மாசமாறது. வியாபாரமெல்லாம் எப்படி நடக்கிறது?

செட்டியார்:—வாங்க! ஏதோ நடக்குதுங்க. ரொம்ப ஸாரிங்க. மன்னிச்சுக்கணும். இந்த வருசம் நான் காலண்டரு போடலிங்க!

நெருப்பில் முழுகி நம்முன்னே வருவாய்' என்றாராம்.

அப்பரிசே தில்லைவாழ்
அந்தணர்க்கும் எரி அமைக்க
மெய்ப்பொருளா னார் அருளி
அம்பலத்தே மேவினார்

[அப்பரிசே— அத்தன்மையாக. மெய்ப்பொருளானார்--நடராஜா.]

தில்லைவாழ் அந்தணர்களுக்கும் நடராஜா கனவிலே தோன்றி, 'திருநாளைப் போவார் பொருட்டு நெருப்பை வளர்க்கவேண்டும்' என்று அருளிச்செய்து மறைந்தருளினாராம். தில்லைவாழ் அந்தணர்கள் சாதிபேதம் பாராட்டுவோராக இருந்தும், நடராஜாவின் அக்கினி பரீட்சை குறித்து, அச்சமடைந்தார்கள். விழித்தெழுந்ததும் கோயில் வாசலிலே அச்சத்துடன் கூடியிருந்தார்கள். எவ்வளவோ மனவருத்தத்துடன் நடராஜாமீது பாரத்தைப்போட்டுப் பிரார்த்தனை செய்தார்கள். அப்பால்நந்தனாரைத் தேடிப் போகிறார்கள்.

தம் பெருமான்
பணிகேட்ட
தவமறையோர்
எல்லாரும்
அம்பலவர்
திருவாயில்
முன்(பு) அச்ச
முடன் ஈண்டி,
'எம்பெருமான்
அருள் செய்த
பணிசெய்வோம்'
என்(று) ஏத்தித்,
தம்பரிவு
பெருகவரும்
திருத்தொண்டர் பால்
சார்ந்தார்.

[அம்பலவர்-நடராஜா. ஈண்டி-கூடி. பரிவு-அன்பு. திருத்தொண்டர் பால்-நந்தனாரிடம்.]

'நந்தனார் தீயில் மூழ்க வேண்டுமா? இதைத் தவிர்க்க முடியாதா?' என்று தில்லைத் தவமறையோர் அஞ்சினார்கள் என்பது தெளிவு. ஆனால், 'ஆண்டவன் கட்டளையை மீறலாமா?' என்ற பெரும் பயமும் ஒருபுறம் இவர்களை வாட்டுகிறது. இந்தநெருக்கடியிலே,

எம்பெருமான் அருள் செய்த
பணி செய்வோம்

என்று தீர்மானிக்கிறார்கள். 'எல்லாம் சிவன் செயல்!' என்ற அச்சத்துடன் தான் பிறகு திருத்தொண்டரான நந்தனாரிடம் போகிறார்கள் அவர் இஷ்டப்படாவிட்டால்? 'இந்த அச்சத்திலிருந்தும் இவ்வளவு மனக் கஷ்டத்திலிருந்தும் தவிப்பிலிருந்தும் உடனே இத்தவமறையோர் தப்பியிருப்பார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

ஆனால், நந்தனாரா இந்தப் சந்தர்ப்பத்தை நழுவவிடப் போகிறவர்?

——::——

கதலீபுர நாடகம்

எஸ். ஜே.

அத்தியாயம் 17

ராவ்பகதூர் பயங்கரம் பூனாவுக்கு வந்து சேர்ந்தார். போலீஸ் ஸ்டேஷனில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சேகரனைக் கண்டதும் அவருடைய நெடுநாளைய மனோரதம் பூர்த்தியானதுபோலத் தோன்றிற்று.

"காராகிருஹ வாஸம் நடக்கிறாப்பலே இருக்கு!" என்றார் பயங்கரம்.

"உங்களுக்கு இப்போது ஜன்மத்திலே சனி. சனிக்கிழமைதோறும் தவறாமல் சனிப்பிரதட்சணம் செய்யுங்கள்!" என்று ஆத்திரத்துடன் பதில் கொடுத்தான் சேகரன்.

அநேகமாக்க் கதைகளில்கூட கதாநாயகன் ஆபத்தில் மாட்டிக்கொள்ளும் சமயத்தில் அவன் குற்றமற்றவன் என்று நிரூபணமாகி எல்லோரும் அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வது வழக்கம். ஆனால் சேகரன் ஐந்துநாட்களாக ரிமாண்டில் இருந்துவருகிறான். இதுவரை அவனுக்குச்சாதகமாக ஒன்றும் திரும்பவில்லை. ராவபகதூர் பயங்கரமோ காராக்ருஹவாஸத்தைப்பற்றி அவனைக் குசலம் விசாரிக்கிறார். நடராஜன் இப்போது தன் எதிரில் இருந்தால் அவனை என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி மனதில் திட்டங்கள் வகுத்துக் கொண்டிருந்தான் சேகரன்.

பயங்கரத்தைப் பொறுத்தவரையில் விசாரணையில்லாமலேயே சேகரனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவேண்டும் என்று விரும்பினார். ஆனால் விசாரணையில்லாமல் ஒருவரைத் தண்டிக்கச் சட்டம் இடம்கொடாததால் பயங்கரத்தின் அபிலாஷை நிறைவேறுவது அசாத்தியமாக இருந்தது.

ராமசாமி சீக்கிரம் வந்து தொலைந்தால் சேகரன் ஜாமீனில் வெளிவரலாம் என்று எண்ணியிருந்தான். நாசமாப்போன ராமசாமி சேகரன் என்ன ஆனான் என்றுகூட கவலைப்படாமல் இருக்கிறானே என்று அவனை மனதிற்குள் சபித்தான். சேகரனிருந்த அறையின் கதவு திறந்தது.

"வெளியே வாருங்க, ஐயா!" என்று ஒரு குரல் கேட்டது. "உங்களை ஜாமீன்லே விட்டிருக்காங்க!"

"எனக்கு யாரு ஜாமீன் கொடுத்திருக்கா? பகவானா?" என்று வியப்புடன் கேட்டான் சேகரன்.

"யாருங்க?" என்று கேட்டான் அந்தக் கான்ஸ்டேபிள். அவன் போலீஸ் டிபார்ட்மெண்டில் புகுந்தபிறகு பகவான் என்ற பெயரையே கேள்விப்பட்டதில்லை.

"யாருமில்லை. பகவான். அதாவது துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபால டிபார்ட்மெண்டில் இருப்பவர். '**பரித்ராணாய ஸாதூனாம் விநாசாயச துஷ்க்ருதாம்......**' என்று முன்னே அர்ஜுனனிடம் சொன்னாரே அவரா, என்றுகேட்டேன்."

"நிச்சயமாய்த்தெரியாதுங்க. ஆனால் வந்த ஆசாமி கிராப் வைச்சிருக்கார். இரட்டை மண்டை ஆசாமி. உயரமா இருக்கார்." என்று வினயமாகப் பதிலளித்தான் கான்ஸ்டேபிள்.

ராமசாமிக்கு மேற்படி லட்சணங்கள் இருப்பதாகச் சேகரனுக்குத் தெரிந்தபோதிலும் பகவானும் இந்த மாதிரியான லட்சணத்தோடு கூடிய அவதாரத்தில் வந்திருக்கக்கூடும் என்று சேகரன் எண்ணினான். இந்த நாலைந்து நாட்கள் காராக்ருஹவாசத்தில் சேகரனுக்கு பகவானிடத்தில் அசாத்ய நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

நாளைக்கு இரண்டு வேளை சியாமளா தண்டகம் பாடினன் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

சேகரனை ஜாமீனில் விடுவித்தவன் ராமசாமி. ராமசாமி ராவ்பகதூர் பயங்கரத்தினிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். ராவ்பகதூர் பயங்கரம் ஆமணக்கெண்ணெய் சாப்பிட்டவர்போல முகத்தை வைத்துக்கொண்டிருந்தார். எதிரில் வந்த சேகரனைப் பார்க்கக்கூட தைரியமில்லாமல் போலீஸ் ஸ்டேஷனின் செங்காவியடித்த சுவரில் இருந்த ஒரு பல்லியைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"சேகர்! அந்த ஆள் என்னிடம் அகப்பட்டுக்கொண்டான்!"

"எந்த ஆள்!"

"அவன்தான்! அந்த ப்ளிஸ்டர்! அந்த வைர வியாபாரி! அந்த இன்ஷ்யூரன்ஸ் ஆளு!"

"அவன் எங்கே? எங்கே அவன்?..." சேகரன் இதைப் பேசிய தொனியைக் கேட்டவர்கள் நடராஜன் எதிரிலிருந்தால் இவ்வளவு நேரம் கொலைக் குற்றத்துக்காக அவனை (சேகரனை) மறுபடியும் அரெஸ்ட் செய்திருப்பார்கள் என்று நினைக்கக்கூடும்.

"அவனை சென்னையிலேயே போலீஸில் பிடித்துக் கொடுத்து விட்டேன்"

"அந்த ராஸ்கலை ஏண்டா இங்கே அழைச்சுண்டு வரலே, இடியட்!" இதைச் சொன்னபோது சேகரனுக்கு ஆத்திரத்தினால் அழுகை வந்தது.

"ஏன்? உன்னைப்போல அவனை மறுபடியும் விட்டுட்டு முழிக்கச் சொல்றயா?"

"இந்த ராவ்பகதூர் களிமண்ணிடம் இதைச்சொன்னயா?" என்றான் சேகரன், ராவ்பகதூரை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டே.

"நான் சொன்னதிலிருந்துதான் அவர் அந்தப் பல்லியை அவ்வளவு கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருக்கிறார்!..."

"மெட்ராஸ் போலீஸிலிருந்து இப்போதான் எங்களுக்குக் கம்யூனிகேஷன் வந்தது, ஸார்! ரொம்ப டிலே ஆகியிருக்கு. இல்லாவிட்டால் மிஸ்டர் சேகரனுக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது...நாங்க என்ன ஸார் செய்ய முடியும்? ஆளைப் பார்த்துவிட்டு முடிவுக்கு வர எங்கள் உத்தியோகம் இடங் கொடுக்கவில்லை. எவிடென்ஸ் மேலேதானே ஸார் நாங்க ப்ரொஸீட் பண்ண வேண்டியிருக்கு! தான் வைர அட்டிகையைத் திருடியது உண்மைதான் என்று நடராஜன் என்கிறவர் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறாராம்..." என்றார் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர்.

சேகரன் பயங்கரத்தை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே, "அந்த நடராஜன் வேறே யாருமில்லே, நம்ப ராவ்பகதூரின் சொந்த மருமான்!" என்றான்.

ராவ்பகதூர் பயங்கர நரஸிம்மம் பல்லியின் நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருந்தார். பல்லி திடீரென்று சுவரில் எங்கேயோ மறையவே, ராவ் பகதூர் எழுந்துகொண்டார்.



"ஆல் ரைட்! ரொம்ப தாங்ஸ்! நான் வரட்டுமா?" என்று விடைபெற்றுக் கொண்டார். சேகரனும், ராமசாமியும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

* * * * *

மூன்று பேர்களும் ஒரே இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டில் அமர்ந்து கொண்டிருந்தார்கள், சென்னைக்குச் செல்லும் ரயிலில்.

ராவ்பகதூரும், சேகரனும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருந்தார்கள். ஒவ்வொருவருடைய வஞ்சமும் தீர்ந்த பிறகு இப்போது ஒவ்வொருவரும் கடந்துபோன விஷயங்களை மனதிற்குள் விமர்சனம் செய்து கொண்டார்கள்.

ராவ்பகதூர் தான் சேகரனைக் கோபித்துக் கொள்ள ஏதாவது நியாயமிருக்கிறதா என்று யோசித்துப்பார்த்தார். சேகரன் திருடன் என்று பத்திரிகை, மூலம் தாம் அம்பலப் படுத்தினார். இது ரோஷமுள்ள ஒரு மனிதனை எவ்வளவு தூரம்பாதிக்கும் என்று ஆராயவேண்டியதில்லை. ஒரு நிரபராதியைத் தாம் இவ்வளவு தூரம் கஷ்டத்திற்குள்ளாகியது தம்முடைய தவறு தானே என்று பச்சாத்தாபப்பட்டார். தன்மேல் சேகரன் மான நஷ்டதாவா போடுவதற்குக்கூட இடமிருக்கிறது என்று நினைத்த போது அவருக்குப் பகீரென்றது. நடராஜன் சொந்த மருமானாய் இருந்துகொண்டு, வைர அட்டிகை திருடியது மட்டுமல்ல, ராவ்பகதூர் கடைசியாக எழுதியிருந்த ஒரு துப்பறியும் நவீனத்தைப் பரிகாசம் செய்தான். இதைப் பயங்க்ரம் அவர்களால் சகிக்க முடியவில்லை. சேகரனிடம் ராவ்பகதூர் எவ்வளவோ கதைகளைப் படித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் அவன் அவைகளைப் பரிகாசம்செய்ததில்லை, அதற்குப்பதிலாக எவ்வளவோ திருத்தங்களைச் சொல்லியிருக்கிறான், உதாரணமாக "யமலோகத்தில் காதல்" என்ற கதையின் வெற்றிக்குக் காரணமே சேகரன்தான். சேகரன் இதுவரை அவரிடம் எவ்வளவு பவ்யமாக நடந்து வந்திருக்கிறான்! ஒரு அபூர்வமான துப்பறியும் கதையை ரசிக்கத்தெரியாத அந்த நடராஜனின் வார்த்தையைக் கேட்டு சேகரனை 'வெளியே போ!' என்று சொன்னது எவ்வளவு பெரிய அநியாயம்? ஏன், சேகரனும் விசாலாட்சியும் பேசினால் என்ன? அது தவறாகுமா? தாம் எழுதிய "காதலும், காட்டுவெளியும்" என்ற கதையில் வரும் மோகனாவும், மோகனாங்கனும் தனியே பேசிக்கொள்ளவில்லையா?......அடாடா! சேசரன் எவ்வளவு நல்லவன்! அவனுடைய ஒத்தாசையும், ஆலோசனையும் கிடைத்தால் கதலிபுரம் பங்களாவிலிருந்து எவ்வளவு அருமையான சிறுகதைகளும், துப்பறியும் கதைகளும் உற்பத்தியாகும்!...



இதே மாதிரியாகச் சேகரனும் சிந்தையில் ஆழ்ந்திருந்தான். உண்மையில் ராவ்பகதூர் பயங்கரத்தினிடம் அவன் கோபமடைய என்ன காரணம் இருக்கிறது? அட்டிகை திருட்டுப்போனதும், தான் ஓடிவந்ததும் ஒன்றாக இருந்ததால் தானே அவர் இப்படிச் சந்தேகப்பட நேர்ந்தது? தவிர, நடேசய்யர் வேறு தன்னைப் பற்றி நகை திருடிக்கொண்டு ஓடிவந்து விட்டதாகப் புகார் சொல்லியிருப்பார். அந்த நிலைமையில் சேகரன் மீது யார்தான் சந்தேகப்படாமல் இருப்பார்கள் ?

நடராஜன் அவருடைய மனதைக் கலைத்திராவிட்டால் இந்தச் சந்தேகம் கூட ஏற்பட்டிருக்காது. நடராஜன் நரிபோல, தான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கண்காணித்து வந்தது சேகரனுக்கு மறக்கவில்லை. சேகரன் ராவ்பகதூருக்கு மிகவும் கடமைப்பட்டிருந்தான். அவனை விட்டைவிட்டுப் போகச் சொன்னதினத்திற்கு முன்னுல் ராவ்பகதூர் அவனைஒன்றுக்கும் கோபித்துக் கொண்டதில்லை. அவர் எழுதும் கதைகளைப்பற்றி அபிப்ராயம் கேட்க அவர் அவனைத் தேடிவந்தார்! மனுஷ்யன் கதை எழுத ஆரம்பித்ததனுல் இலக்கியத்திற்குக் கேடுகாலம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது என்பது உண்மையானுலும், அவர் சேகரனிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தார்?......தவிர ராவ்பகதூர் நரஸிம்மம் இல்லை என்ருல் விசாலாட்சி போன்ற ஸ்திரீரத்னம் உலகத்திற்குக் கிடைக்க முடியுமா? ராவ்பகதூரிடம் தான் சற்று மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டும். அவரிடம் தான் இழந்துவிட்ட நல்ல பெயரைத் திரும்பவும் பெறவேண்டும்... இல்லாவிட்டால் விசாலாட்சியை அவன் அடைய முடியாது. பிறகு இந்த உலகத்தில் வாழ்வதில் என்ன பயன் இருக்கிறது?

பக்கத்தில் ஒரு கனைப்புச் சத்தம் கேட்டது. ராவ்பகதூர் நரஸிம்மம்தான் மேற்படி சப்தத்திற்குக் காரணமாயிருந்தார்.

சேகரன் தலை நிமிர்ந்து பார்த்தான்.

"போனது போகட்டும். நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். என்னுடைய முட்டாள்தனத்தினுல் உங்களை அநேக கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக்கிவிட்டேன். தாங்கள் என்னை மன்னிக்க முடியாது என்று தெரியும். இருந்தாலும் நான் செய்த தவறுக்கு உண்மையாகவே வருந்துகிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்"—பயங்கரத்தின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

"என்மேலும் கொஞ்சம் தப்பு இருந்ததனுல் தானே நீங்கள் இப்படியெல்லாம் செய்ய நேர்ந்தது? நான் எங்க மாமாவந்த அன்று ஓடி வந்திருக்காவிட்டால் இந்தக் கஷ்டங்களெல்லாம் நேர்ந்திருக்காது. எவ்வளவு பெரிய புத்திசாலியும் வாழ்நாளில் ஒரு அசட்டுத்தனம் செய்யாமல் இருக்கமுடியாது.........ஏதோ ஒரு பெரிய நாவல் மாதிரி நடந்துவிட்டது" என்று சொல்லிவிட்டுச் சிரிக்க முயன்ருன் சேகரன்.

"நீங்கள் நாவல் என்றதும் ஞாபகம் வருகிறது. நான் ஒரு துப்பறியும் கதை எழுதியிருக்கிறேன். கையோடு கொண்டு வந்திருக்கிறேன். கொஞ்சம் பார்க்கிறீர்களா?" என்று சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் பெட்டியிலிருந்து சில கையெழுத்துப் பிரதிகளை எடுத்தார்.

சேகரன் ஆவலோடு வாங்கிக்கொண்டு, மௌனமாகப் படிக்க ஆரம்பித்தான்.

"ராமசாமி! நீயும் இதை அவசியம் படிச்சுப் பார்க்கணும். அடாடா! முனிதாண்டவபுரத்திலே இரவு வேளையை வர்ணித்து ஒரு பாரா எழுதியிருக்கிருர். ரொம்ப தத்ரூபமாயிருக்கு. அப்படியே நாமும் ராத்திரியிலே அந்த முனிதாண்டவபுரத்திலே சஞ்சரிக்கிருப்போல இருக்கு!"

சேகரனுடைய புகழ்மொழிகளால் ராவ்பகதூருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. மேதாவிகளுக்குமட்டுமே உரிய புன்சிரிப்பை முகத்தில் தருவித்துக்கொண்டு பெருமிதத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் ரயிலுக்கு வெளியே சூழ்ந்திருந்த அந்தகாரத்தில் தலையை நீட்டிக் கொண்டார்.

(தொடரும்)

ரமாவைக் கேளுங்கள்!

'குங்குமம்'

நான் எவ்வளவுதான் யோசனை செய்து பார்த்தாலும் இந்த ஜனங்களின் போக்கு எனக்குக் கொஞ்சம் கூடப் புரியவேமாட்டேனென்கிறது. என்னுடைய ஓரகத்தியின் பிறந்தகம் பணக்கார இடம்தான். பொழுது விடிந்தால் அஸ்தமித்தால் அண்ணன், தம்பி, மாமன் என்று காரில் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அம்மா கொடுத்தனுப்பினாள், அப்பா கொடுத்தனுப்பினார் என்று எதையாவது கொண்டு கொடுத்துவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள். வைரங்களாகவே போட்டுக்கொண்டிருக்கிறாள். நாள், கிழமை என்றால் புதுப் புது புடவைகள் வாங்கி உடுத்துகிறாள். அகமுடையானும் மாதம் இருநூற்று ஐம்பது ரூபாய் சம்பாதிக்கிறார். இருக்கட்டுமே. அவள் வைரநகை போட்டுக் கொண்டிருந்தால் அவளோடு இருக்கிறது, யாருக்காவது ஏதாவது கொடுக்கப்போகிறாளா? புதுப்புடவைகள் வாங்கி உடுத்தினால் யாருக்காவது ஒரு வேளை உடுத்திக்கொள்ள இரவல் கொடுக்கப்போகிறாளா? பிறந்தகத்தார்கள் காரில் வந்து இறங்குகிறார்கள் என்றால் நாம் எங்காவது போகவேண்டுமென்றால் ஒரு வேளைகு நமக்குக் கொடுக்கப் போகிறார்களா? அவர்கள் பெண்ணாயிற்று, மாப்பிள்ளையாயிற்று, சினிமாவுக்கோ டிராமாவுக்கோ அழைத்துக் கொண்டு போகிறார்கள், வருகிறார்கள். மைத்துனர்தானாகட்டும். உத்தியோகத்தில் இருக்கிறார், சம்பாதிக்கிறார் தன் பெண்டாட்டிக்குப் புடவைகள் வாங்கிக் கொடுப்பதும் நகைகள் வாங்கிப்போடுவதும் பாங்கியில் பெண்டாட்டியின் பெயரில் மாதா மாதம் பணத்தைக் கட்டுவதுமாக இருக்கிறதேயொழிய குடும்பத்துக்காக ஒரு பைசா உபயோகமுண்டோ?

இந்த லட்சணத்துக்கு வீட்டில் ஓரகத்திக்கும் அவளுடைய அகமுடையானுக்கும் இருக்கிற கௌரவம் வேறு யாருக்கும் கிடையாது. அவள் ஏதாவது கொஞ்சம் அதிகப்படியாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் நன்றாக இருக்கிறது! அதிகமாக உடம்பை அலட்டிக் கொள்ளாதே. ஏற்கெனவே டாக்டர் ஹார்ட் வீக், ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். நீ போய் உட்கார், நாங்கள் செய்துகொள்கிறோம் என்று அத்தை, மாமியார் ஆகியவர்களிடமிருந்து ஏககாலத்தில் குரல்கள் கிளம்பும். அத்துடன் ஏண்டி, ரமா! நீ என்னடி செய்துகொண்டிருக்கிறாய் அங்கே? அவள் (ஓரகத்தி) ஒண்டியாக அலைகிறாள், பார் 'என்ற மாமியாரின் உத்தரவுகூடவே வரும். அவளுக்குப் புஸ்தகம் வாசிக்க ஆரம்பித்துவிட்டால்இந்த உலக ஞாபகம் இருந்தால்தானே! என்னமோ அவன் (எங்களவர்தான்) தனக்குப்பிடித்தமான உத்யோகம் வந்தால்தான் வேலைக்குப் போவேனென்று வீம்பு செய்துகொண்டிருக்கிறான். 'உண்டான' பணத்தையும் செலவழித்துப் படித்துவிட்டு போதாததற்கு அவள் (நான்தான்) புஸ்தகமும் கையுமாக இருந்து விடுகிறேனென்கிறாள். அவளும் (ஓரகத்தி) அவனும் (மைத்துனர்) பாவம் இந்த வீட்டிற்கு உழைக்கப் பிறந்திருக்கிறார்கள்' என்று அத்தைக்காரி எரிகிற நெருப்பில் நெய்யை ஊற்றுவாள். 'என்ன பிரமாதம் அத்தை! யார் செய்தால் என்ன? தேய்ந்தாபோய்விடுவோம். பரவாயில்லை. இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. நானே அறைத்துவிடுகிறேன், என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறமாதிரி பதில் சொல்லிவிட்டு குழவியை இன்னும் கொஞ்சம் அதிகமாக ஓசை கேட்கும்படி கொட கொட' வென்று சுற்றிவிடுவாள். தோசைக்கு அறைத்துக்கொண்டிருக்கும் ஓரகத்தி.

'எப்பொழுது பெண் ஜன்மம் எடுத்துவிட்டோமோ, வேலைக்குச் சோம்பினால் முடியாது. இந்த வேளைக்கு இவள் செய்தால் நாளைக்கு அவள் செய்கிறாள்? இதற்கென்ன பிரமாதம்? இவ்வளவு ஆட்சேப ஸமாதானங்கள்? வேலையிருந்தால் படிக்கவா போகிறாள்? வேலையில்லாமல் உட்கார்ந்து கொண்டிருக்

கிறோமே, வீண் பொழுது போக்குவானேன் என்று வேலையில்லாத வேளையில் புத்தகம் பார்த்துக்கொண்டிருக்கிறாள். நம்மாதிரி வம்பளந்து வீண் பொழுது போக்காமல் எதையாவது படித்துக்கொண்டிருக்கிறாளேயென்று நான் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறேன்' என்று பெரிய நாத்தனார் என் பக்கமாகக் கொஞ்சம் பரிந்து பேசுவாள்.

பொதுவாகவே பெரிய நாத்தனாருக்கும் ஓரகத்திக்கும் கொஞ்சம் பொருத்தம் சரியாக இருப்பதில்லை. பெரிய நாத்தனாரும், அவளுடைய குழந்தைகளும் இங்கு இருந்துகொண்டிருப்பதில் ஓரகத்திக்கு இஷ்டமில்லை. சம்பாத்தியமில்லாமல் நாங்கள் இங்கு இருப்பதே நஷ்டமாகத் தோன்றும், அவளுக்கு பெரிய நாத்தனாரும் அவளுடைய குழந்தைகளும் 'சோற்றை மாள வைத்துக்கொண்டிருப்பது, பிடிக்குமா? பணக்கார இடத்தில் பிறந்துவிட்டாளே தவிர மகா அல்ப மனது. பெருந்தன்மையே கொஞ்சம் கூடக் கிடையாது. அளந்து அளந்து கணக்குப்பார்ப்பதெல்லாம் பணக்காரர்கள்தான் என்று நீ சொல்வாயே. அது இங்கு வந்து பிறகுதான் எனக்கு அனுபவத்தில் தெரிந்தது. இத்தனைக்கும் எல்லோரும் சாப்பிடுவது மாமனார் பென்ஷனும் பிதுரார்ஜித சொத்தும். இதற்கே இவ்வளவு அசூயை, அகங்காரம்! சொந்த பணத்தையும் குடும்பத்தில் செலவழித்துவிட்டால் இன்னும் எப்படித்தான் இருப்பாளோ?

ஒன்றுமில்லை. சின்ன ஸமாசாரம். ராத்திரி வேளையில் பெரிய மைத்துனருக்கு ஆழாக்கு பால். நாளெல்லாம் 'உழைக்கிறார்.' சிறிய மைத்துனருக்கு ஆழாக்கு பால்-படிக்கிற பிள்ளை, சிறிய நாத்தனாருக்கு ஆழாக்குப் பால்-படிக்கிற பெண், ஓரகத்திக்கு ஆழாக்கு பால்—பணக்கார இடத்துப்பெண். இவருக்கும் (எங்களவரைத்தான் சொல்கிறேன்) எனக்கும்? பேசக் கூடாது. இவருக்கு உத்தியோகமில்லை. நான் பணக்கார இடத்துப் பெண்ணில்லை. சாப்பிடும்பொழுதும் அப்படித்தான். அவர்களுக்கெல்லாம் நெய் இரண்டு ஸ்பூன் என்றால் எங்கள் இலையில் ஒரு ஸ்பூன்தான். எதைப்போட்டாலும் அவர்கள் இலையில் வேண்டி வேண்டிப் பரிவுடன் போடுவார்கள். எங்கள் இலைக்கு வரும்போது 'எதற்காக இவர்களுக்குப் போடுவது?' என்ற தோரணையில்தான் வந்துவிழும்.

என்ன நீகூட இவ்வளவு அற்பத்தனமாக இதையெல்லாம் புகார் செய்துகொண்டு கிளம்பிவிட்டாயே என்று நீ கேட்கலாம். 'என்னமோ விவேகமில்லாத ஜனங்கள். நாளைக்கே நமக்கு நல்ல காலம் வரத்தான்போகிறது. அப்பொழுது நம்முடைய பெருந்தன்மையைக்காட்டி இதுகளுக்கெல்லாம் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்' என்று நானும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்க்கிறேன். இருந்தாலும் மனசுதானே. ஒரு வேளை இல்லாவிட்டால் ஒரு வேளை கஷ்டமாகத்தான் இருக்கிறது.

இதையெல்லாம் பார்த்துவிட்டு நான் சில சமயங்களில் இவரிடம் சொல்வதுண்டு: 'காலம் ரொம்பவும் மாறிவிட்

"...நீ போய் உட்கார் நாங்கள் செய்துகொள்கிறோம் என்று..."

டது. ஜனங்களுக்குப் பணம்தான் பிரதானமாகப் போய்விட்டது. பணம்தான் தெய்வம், பணம்தான் பெற்றோர்கள். பணம்தான் சகோதரிகள். பணம்தான் ஸர்வமும். அதற்கு மிஞ்சினது எதுவும் கிடையாது என்ற மனப்பான்மை ஜனங்களிடையே ஏற்பட்டுவிட்டது. அவன் கள்ளமார்க்கெட் செய்யட்டும். கொள்ளை லாபமடிக்கட்டும். மோசம், பொய், பித்தலாட்டம் எது வேண்டுமானாலும் செய்யட்டும். நிறைய பணம் சம்பாதித்து விட்டால் போதும். அவனுக்குத்தான் இந்த உலகத்தில் மதிப்பு. என் படிப்புக்குத்தகுந்த கௌரவமான வேலை வேண்டுமென்று உட்கார்ந்துகொண்டிருந்தால் யாரும் மதிக்கவே மாட்டார்கள். எந்த வேலையாவது இருக்கட்டும் நாலுகாசு—ஊஹூம்—நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும். இன்றைய உலகம் அவ்வளவில் தான் இருக்கிறது என்பேன்.

"......நீ என்னடி செய்துகொண்டிருக்கிறாய்? என்று......"

இதற்கு அவர் சொல்வார்: பைத்யமே! இன்றைக்கும் புலி, பசியினால் பிராணனே போய் விடுவதென்றாலும் புல்லைத் தின்னாது. கழுதைகள்தான் வயிறே பிரதானமென்று காகிதத்தைக்கூட விடாமல் பொறுக்கித் தின்னும். இருக்கட்டும். அவசரப்படாதே. பொறுத்தவர் பூமியாள்வார். என் தகப்பனார் சம்பாத்தியத்தில்தான் சாப்பிடுகிறேன்; என்று ஒரு சமயம் பதில் சொல்வார். சில சமயங்களில் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலேயும் போய்க்கொண்டிருப்பார். ஆனால் சில சமயங்களில் அவர் முகத்தில் ஏக்கத்திற்கான அறிகுறிகள் தென்படும். என்னதான் இருந்தாலும் வீட்டில்தான் உதாசீனம் செய்யப்படுவது அவருக்குத் தெரியாமலா இருக்கும்? என்னமோ கால வித்யாஸம் என்று மனதிலேயே குமுறிக்கொண்டிருக்கிறாரோ என்னவோ? அப்படியிருக்கும்போது நாம் ஏன் அனாவசியமாக அதைக் கிளறிவிட வேண்டுமென்று வர வர நானும், நடக்கிறது நடக்கட்டுமென்று இது பற்றி அவரிடம் ஒன்றும் அதிகமாகச் சொல்வதே கிடையாது.

அவ்வளவென்ன, என் ஓரகத்தியின் பிறந்தகத்தார் வந்தால் வீட்டோடு உபசரிப்பு பிரமாதப்படும். எல்லோரும் அப்படி அப்படியே வேலைகளைப் 'போட்டுவிட்டு' ஓடி வந்து வரவேற்பதும் அரை பர்லாங் தூரம் கூடவே சென்று வழி விடுவதும் ஹி, ஹி, என்று அவர்கள் முகத்துக்கு இச்சகமாய்ப் பேசுவதும் அமர்க்களப்படும். என் பிறந்தகத்தார்கள் வருவார்கள். வந்தது தெரியாமல் போய்க்கொண்டிருப்பார்கள். 'வந்தாயா? போனாயா? என்று யாராவது விசாரித்தால் தானே! அவ்வளவு உதாசீனம்! இதெல்லாம் இவருக்குத் தெரியாமலா இருக்கும்?

'இங்கே கொஞ்சம் வந்துவிட்டுப்போ. அப்புறம் அந்தக் கடிதத்தை எழுதிக்கொள்ளலாம்' என்று தெருவிலிருந்து அத்தையின் குரல் கேட்கிறது.

தெருவில் கும்பலாக நின்றுகொண்டு ஒருவரோடு ஒருவர் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்னவென்று தெரியவில்லை. அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
ரமா



13

மறதியும் வேண்டும்!

★

'என்னம்மா இது? என் செருப்பைக் காணவில்லையே! உன் வீட்டு வராந்தாவில் கழற்றிப் போட்டுவிட்டு உள்ளே வர வேண்டுமென்று காலை உதறினேன், அப்போதுதான் கண்டு பிடித்தேன் காலில் செருப்பு இல்லையென்று. இரண்டு மூன்று சிநேகிதிகளைப் பார்த்துவிட்டு, ஒரு பழக்கடையிலும் பழம்புஸ்தகக் கடையிலும் பழங்களும் சில புஸ்தகங்களும் வாங்கினேன். அந்த இடங்களில் எந்த இடத்திலே செருப்பைப் போட்டுவிட்டேனோ தெரியவில்லை' என்றாள் கமலா. இப்படிச் சொல்லிக்கொண்டே தன் கால்களைப் பரிதாபமாகப் பார்த்தாள். ஒருவேளை தான் மறந்துபோன செருப்புகள் காலில் தானே கிடக்குமோ?—என்ற சந்தேகமும் மறுபடியும் வந்திருக்கலாம். ஆனால் மறந்துபோன செருப்புக்கள் மறைந்தே போய் விட்டன!

'நமது பிரதம மந்திரி பண்டித நேருவுக்கு எவ்வளவு மாதச் சம்பளம வாங்குகிறோம் என்பதே ஞாபகத்திற்கு வரவில்லையாமே' என்றாள் ஸரோஜா.

சமீபத்தில் நடந்த காங்கிரஸ் விழாவிலே கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் சம்பளம் குறித்துப் பேசும்போது, தாம் பெற்றுவரும் சம்பளத்தை வெளியிட விரும்பிய நேருவுக்கு அச்சமயத்திலே அது நினைவிற்கு வரவில்லை என்பதையும், ராஷ்டிரபதி பட்டாபியின் உதவியைப் பண்டிதர் அவ்விஷயமாக நாடியும் பயன்படவில்லையென்பதையும், ராஷ்டிரபதி திடுக்கிட்டுத் திருதிருவென்று விழித்ததும், 'சர்தார் பட்டேல் சமயத்தில் கைவிடமாட்டார்' என்று அவர் பக்கம் திரும்பியதையும், அந்தத் திசையிலும் உதவிபெறாது பண்டிதர் தம் முயற்சியில் தோல்வியுற்றதையும், பண்டிதர், பட்டாபி, பட்டேல் என்ற மூவர் நிலையும் கண்டு சபை அடங்காச் சிரிப்பில் ஆழ்ந்து போனதையும் எங்களுக்கு ஞாபகப்படுத்தினாள் ஸரோஜா. பிறகு 'நம் பிரதமருக்குச் சம்பள மறதி: நம் கமலாவுக்கோ செருப்பு-மறதி' என்று சிரித்தாள்.

'இதனால் நீ மறதி நல்லதென்று சொல்லுகிறாயா? என்னைப்போல் செருப்பைப் பறிகொடுத்தால் அல்லவா, செருப்புஜோடி ஆறு ரூபாயாக இருக்கும் இந்நாளில் அந்த நஷ்டம் உனக்குப்படும்?' என்றாள் கமலா ஸரோஜாவை நோக்கி.

'அப்படித்தானே சரோஜா? பண்டித நேருவுக்குச் சம்பள மறதியால் சம்பளம் நஷ்டமாகி விடவில்லையே; கமலாவுக்கோ செருப்பு-மறதி நஷ்டத்தை விளைவித்துவிட்டது' என்றேன் நான்.

'கமலாவுக்குத்தான் நஷ்டமென்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்? யாராவது ஒரு சிநேகிதி வீட்டு வராந்தாவில் அப்படியே கிடக்கும்; அல்லது வீட்டுக்காரியம்மாள் பந்தோபஸ்தாக எடுத்து வைத்திருக்கலாம். பழக்கடை முதலாளியும் பழம் புஸ்தகக்கடை முதலாளியும் பழஞ் செருப்பு வியாபாரம் செய்யாவிட்டால், அங்கே போட்டிருந்தாலும் செருப்பு மீண்டும் கிடைக்கும். ஒருவேளை அகப்படாமலே போய் விட்டாலும் நைந்த பழைய செருப்புக்களின் ஸ்தானத்திலே புதிய செருப்பு-ஜோடி அல்லது ஜோடிகள் கமலாவின் கமல பாதங்களை அலங்கரிக்குமே!' 'என்றாள் ஸரோஜா.

'சரி. செருப்பு வந்தாலும்சரி, போனாலும்சரி; இந்த நஷ்டத்திற்கு இவ்வளவு பிரமாதப்படுத்த வேண்டாமே! நமது கவர்னர் ஜெனரலின் சம்பளம் 5,500 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. ஏதோ கொஞ்சம் குறைத்திருக்கிறார்களா? 20,000 ரூபாய்ச் சம்பளம் 5,500 என்று குறைக்கப் பட்டிருக்கிறது. கொழுத்த சம்பளம் வேண்டாமென்று ராஜாஜியே பிடிவாதம் செய்தாராம். உத்தியோகஸ்தர்கள் "சம்பளம் காணாது" என்று பிடிவாதம் பிடித்து "வேலை நிறுத்தம் செய்வோம்" என்று பயமுறுத்தியும் பார்த்தார்கள். இப்படிப்பட்ட சுதந்திர இந்தியாவில் சுதந்திரமாகவே ராஜாஜி குறைந்த சம்பளம் போதும் என்றார். நேரு, ராஜாஜி முதலானவர்கள் நாட்டின் லாப நஷ்டங்களைக் குறித்தே ஆலோசித்து வருகிறார்கள். நம்முடைய கமலாவோ செருப்பு நஷ்டம் ஏற்படுமோ என்று இந்தப் பாடுபடுத்துகிறாள்' என்றேன் நான்.

அதற்குக் கமலா சொன்னாள்: 'நீங்கள் நினைக்கிறமாதிரி நான் இன்னும் அவ்வளவு மோசமாகி விடவில்லை, "செருப்பை இழந்துவிட்டோமோ?" என்ற கவலைகூட இல்லை; "நம்முடைய ஞாபகசக்தியை இப்படி இழந்துவிட்டோமா?" என்று அந்த நஷ்டத்திற்குத்தான் கவலைப்படுகிறேன்'

பிறகு எங்கள் சம்பாஷணை ஞாபகசக்தி விஷயமாகச் சென்றது. 'ராஜாஜிக்கு அபார ஞாபகசக்தி' என்றேன் நான்.

'நேருவுக்குத்தான் ஞாபகசக்தி குறைவா? குறிப்புக்கள் இல்லாமல், தம்மைத் தயாரித்துக்கொள்

ளாமல் அதிசயமாக அரசியல் பிரசங்கங்கள் செய்துவிடுகிறாரே' என்றாள் ஸரோஜா.

'இவ்வளவு ஞாபகசக்தியுள்ளவர் சம்பளத்தை மறந்துவிட்டாரே நான் செருப்பை மறந்துவிட்டதுபோல்!' என்றாள் கமலா.

'பெரியோர் சுயநலத்தை மிகவும் அற்பமானதென்று மறப்பார்கள். பிறர் நலத்தை ஞாபகமாய்ப் பேணுவார்கள், ஜவாஹரைப் போன்ற மனிதகுல மாணிக்கங்களின் லட்சியம் இது, என்றேன் நான்.

'அது இருக்கட்டும். பழைய இந்தியாவிலே வேதம் முதலான கிரந்தங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்தார்களாமே. உலகத்திலேயே அளவில் பெரிய நூல் மகாபாரதம்: அந்த வியாச பாரதம் முழுமையும் அப்படியே ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்தவர்களும் இருந்தார்களாமே!' என்றாள் ஸரோஜா.

'என்ன அசுர சாதகம், ராட்சஸ ஞாபகசக்தி!' என்று அதிசயித்தாள் கமலா.

அதற்கு நான் சொன்னேன்: 'பழைய இந்தியாவில்மட்டுமல்ல, பழைய கிரீஸிலும் ''ராட்சஸ ஞாபகசக்தி'' காணப்பட்டது. பார்ஸன் (Porson) என்ற கிரேக்க வித்துவான் ஹோமர் என்ற கிரேக்க மகாகவியின் காவியம் முழுமையும் அப்படியே ஒப்பிப்பார். ஏன், ஹோமரிலிருந்து ஸான்அபன் (Zanophen) என்ற கிரேக்க ஆசிரியர் வரை எழுந்த நூல்களையெல்லாம் வரிவிடாமல் முழுக்க முழுக்க ஞாபகத்தில் வைத்திருந்தாராம். நீங்கள் திடுக்கிடவேண்டாம்: இன்ன விஷயம் இன்ன பக்கத்தில் வருகிறது என்றுகூட நினைவில் வைத்திருந்தாராம்.

'பழைய கிரீஸுக்கும் பழைய இந்தியாவுக்கும் பல முக்கிய அம்சங்களிலும் ஒற்றுமை இருக்கிறதே' என்றாள் ஸரோஜா.

'இவ்வளவு ஞாபகசக்தி எதற்காகவோ? ஆங்கிலச் சீமையில் இப்படிப்பட்ட விநோத ''ஞாபக ராட்சஸ''ர்களைப் பார்க்க முடியாதென்று நினைக்கிறேன். ஆங்கிலேயர்கள் ஞாபக சக்தியைக் காட்டிலும் கூர்மையான சொந்த புத்தியையும் சிந்தனை-வலிமையையும் ஆராய்ச்சித் திறமையையும் பாராட்டுகிறார்களென்று நம்புகிறேன்' என்றாள் கமலா.

'இருக்கலாம் எனினும் ஆங்கிலச் சீமையிலும் ''ஞாபக அரக்கர்கள்'' இல்லையென்று சொல்ல முடியாது. மெக்காலேயைக் குறித்துக் கேட்டிருக்கிறாயா? அவ்வளவு பழைய காலத்தவரும் இல்லை என்றேன் நான்.

மெக்காலே என்றால் அறியாத பள்ளிப் பிள்ளைகளும் உண்டோ? வியாசரையும் வால்மீகியையும் குறித்துத்தான் நமக்கு விசேஷமாக என்ன தெரியும்? மெக்காலே ஒரு தரம் வாசித்ததை அப்படியே ஒப்பிக்கக்கூடிய ஏகசந்தக் கிராஹி என்றெல்லாம் தெரியுமே என்றாள் ஸரோஜா.

'மெக்காலேக்கு அற்ப விஷயங்களும் ஒரு தரம் படித்ததுமே அப்படியே நினைவில் பதிந்துவிடும்' என்றேன் நான்.

'அப்படியானால் அனாவசியமான மனச்சுமைகளையும் அவர் சுமந்திருக்க வேண்டுமே! என்று பரிதாபப்பட்டாள் கமலா.

'பரிதாபப்படவேண்டிய ஞாபக சக்திமட்டுமல்ல அது, பயப்படவேண்டிய ராட்சஸ ஞாபகமும் கூட!' என்றேன் நான்.

'மெக்காலேயின் ஞாபக சக்தி வரப்பிரசாதமா, சாபக்கேடா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'இரண்டும்தான்' என்றேன் நான்.

'ஆகவே, ஞாபகமும் வேண்டும், மறதியும் வேண்டும் என்கிறாயா? அப்படியானால் என் மறதியும் நல்லதுதானா?' என்று நகைத்தாள் கமலா.

'நம்முடைய நாட்டிலேதான் ஞாபகசக்தியை ராட்சஸ ஞாபக சக்தியாக அனாவசியமாய் வளர்த்துக்கொண்டார்கள் என்று எண்ணியிருந்தேன்' என்றாள் ஸரோஜா.

'மெக்காலேயைப்போன்றவர்கள் அப்பியாசத்தால் ஞாபகசக்தியை வளர்த்துக் கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. இயற்கையிலேயே சிலருக்கு அத்தகைய சக்தி அமைந்துவிடுகிறது' என்றேன் நான்.

'கவிகளைப்போல், கணித மேதாவி முதலான மேதாவிகளைப் போல், ராட்சஸ ஞாபக சக்தியுள்ளவர்களும் கருவிலே திருவுடையவராகப் பிறக்கிறார்களா?' என்று கேட்டாள் கமலா.

'அசுர ஞாபகசக்தி பிறவியிலேயே சிலருக்கு அமைந்து விடுகிறது. ஆனால் அவர்களெல்லாம் மேதாவிகளென்று சொல்லமுடியாது. உதாரணமாக, மெக்காலே மேதாவியா? மெக்காலேயின் எழுத்திலே—ஏன், அவர் எழுதிய ஒவ்வொரு பக்கத்திலும்—மேதையின் சுவடுகளைக் காட்டிலும் ராட்சஸ ஞாபகத்தின் சின்னங்களே காணப்படுகின்றன. மெக்காலே விஷயத்தில் இந்த அபார ஞாபக சக்தியே மேதைக்கு வழியில்லாமல் திணற அடித்துவிட்டது என்று எனக்குத் தோன்றுகிறது' என்றேன் நான்.

இவ்வளவு நேரமாக மறதியைக் குறித்தும் ஞாபகசக்தியைக் குறித்தும் பேசிக்கொண்டிருந்தோமே, எந்தத் தெய்வமாவது இங்கே வந்து ''உங்களுக்கு ஞாபகசக்தி வேண்டுமா, வேண்டாமா?' என்று கேட்டால் என்ன சொல்வது?' என்று கேட்டாள் ஸரோஜா.

'நான் வேண்டும் என்றுதான் சொல்லுவேன். ஞாபகசக்தியிருந்தால் செருப்பையாவது தொலைக்காமல் இருக்கலாமல்லவா?' என்றாள் கமலா.

'ஞாபகசக்தி வேண்டியதுதான். ஞாபகசக்தியும் ஒரு சக்தியல்லவா? அறிவைப்போல் ஒரு சக்தி. ஓரளவு ஞாபகசக்தியில்லாமல் அறிவுதான் தரிக்கமுடியுமா?' என்றேன் நான்.

'நான் தேவதையிடம் மறக்கும் சக்தியையும் வரப்பிரசாதமாய்க் கேட்பேன். நாம் பார்க்கும், கேட்கும், பத்திரிகைகளிலும் தற்காலச் சிறு கதைகளிலும் படிக்கும் கோர பயங்கரங்களெல்லாம், வேண்டாத விஷயங்களெல்லாம் மறக்கமுடியாதபடி மனசிலே நிலைத்துவிட்டால் வாழ்க்கை நரகமாகிவிடுமல்லவா? அழகை நினைக்க வேண்டும், உண்மையை நினைக்க வேண்டும், நன்மையை நினைக்க வேண்டும். அழுக்கும் பொய்யும் புன்மையும் எப்போதும் நினைவில் இருந்தால், நல்வாழ்க்கையும் இன்ப வாழ்க்கையும் வாழ்வதுதான் எப்படி? ஆகவே மறதியும் வேண்டும் அம்மா!' என்றாள் ஸரோஜா.

ஆரோக்ய வாழ்க்கை

பரிசேந்த்ரியம் என்னும் சர்மம்

★

வைத்தியரத்னம்
எம். துரைசாமி ஐயங்கார்

சர்மத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளும் முறைகளையும், அதற்கு நேரிடும் ரோகங்கள், அவற்றின் பரிகாரங்கள் ஆகியவற்றையும் பற்றி விளக்குவதற்கு முன், அதன் இயற்கை அமைப்பைப்பற்றி முதலில் முக்கியமான சில விஷயங்களை வாசக நேயர்கள்தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆகவே, சர்மம் எவ்விதமானது, எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதைப் பற்றிஇங்கு சிறிது விளக்குவோம்.

பரிச உணர்ச்சியை அளிப்பது சர்மம் என்கிற அவயவம். கை கால் கண் கல்லீரல் முதலியவற்றைப்போல் திரண்டு காணப்படும் உடற் பாகமே அவயவம் எனப்படும் என்பதாகக் கருத வேண்டாம். மெல்லிய போர்வைபோல் உடலனைத்தையும் வெளிப்புறமெங்கும் மறைத்துக்கொண்டு பரவியிருக்கும் இச்சர்மமென்கிற தோலும் வெகு முக்கியமான, விசாலமான அவயவமேயாம். உருவத்திலும் உபயோகத்திலும் பலவேறு வகையில் சிக்கலான தன்மையுள்ளது சர்மமென்னும் இவ்வவயவம். தமிழில் வெகு ஸாதாரணமாய் தோல் என்று வழங்கப்படும் இதை சர்மம் என்று மாத்திரமல்ல, த்வக் என்றும் ரக்ததரா என்றும் ரோமபூமி என்றும், சரீராவரணம் என்றும் பல காரணப் பெயர்களால் ஆயுர்வேதம் வழங்குகிறது. வெங்காயத்தின் மேல் புரணிகளைப்போல் சர்மம் அநேகம் படலங்களென்கிற புரணிகளாகப் பிரிக்கக்கூடியது; ஆயுர்வேதத்தில் இது ஏழு கலைகள் அல்லது படலங்களாகப் பிரித்துக் கூறப்படுகிறது. ஆனால், முக்கியமானது மாம்ஸதரா கலா என்கிற படலம் அல்லது புரணி; இது உட்புறத்தில் அமைந்துள்ள கனமான படலம். உரத்துத் தடித்தாற்போல் வெளிப்புறத்தில் காணப்படுவதும் பரிசிக்கப்படுவதுமான மேற்புரணி உதகதரா கலா அல்லது பாஹ்ய படலம் எனப்படும்; இப்புரணியை ஸூக்ஷ்ம தர்சினி என்னும் கருவியின் மூலமாக உற்று நோக்குவோமானால்,(இது இயற்கையில் மிக்க மெல்லிதாக இருந்தும்) பதனிட்ட முளைத்தோல்போல் செதிள்கள் அடர்ந்ததாகத் தோற்றும். இது நமது தேகநிறத்தை வெளியில் விளக்க ஆதாரமாயிருப்பதால் இதை அவபாஸிநீ என்றும் கூறுவோம்.

பாஹ்ய சர்மத்திற்கு அடியில் உட்புறத்தில் உடலனைத்தையும் போர்த்திருக்கும் தோல் அந்தச் சர்மம் எனப்படும். பரிச உணர்ச்சிக்கு ஆதாரமானது இச்சர்மம். ஆகவே முதலிற்கூறிய பாஹ்ய சர்மம் உடலைப் போர்த்துக் காப்பதற்காகவும், பின்னர் கூறிய அந்தச்சர்மம் உணர்ச்சியுண்டு பண்ணும் நரம்புகளின் இழைகளோடுகூடி வியர்வையை ஸ்வேதக் கிரந்திகளிலிருந்து வெளிப்படுத்தி உடலைச் சுத்தமாக்கவும் ஏற்றவகையில் அமைந்திருக்கின்றன என்றறியலாம். அந்தச் சர்மமென்கிற உட்புறத் தோல்தான் அதிக பருமனானது. இவ்வுட்புறத்தோலையும் அங்குரிணி என்றும், ஜாலிநீ என்றும் இரு புரணிகளாகப் பிரித்துக் கூறுவர். மிகவும் நுண்ணிய முளைகள் போன்ற உருப்புகள் அடங்கியது முந்திய அங்குரிணீ என்னும் சர்மம். நாடி நரம்புகளாலும், ஸ்ரோதஸ்ஸுகள் என்கிற இரத்தக் குழாய்களாலும் பின்னிக்கொள்ளப்பட்ட ஸ்வேதக் கிரந்திகள் (வியர்வை கோளங்கள்) அடங்கியது பிந்திய ஜாலிநீ என்கிற சர்மம். இதற்கு அடியில் உள்ள மேதஸ் என்கிற கொழுப்பைப் போர்த்து சர்மத்திற்கு மிருதுத்தன்மையைக் கொடுக்கும் மேதோதராகலா என்கிற புரணியும் இதைச் சேர்ந்த பாகமேயாம்.

நமது உடலில் வாய், நாசி, செவி முதலிய நவத்வாரங்கள் என்னும் ஒன்பது இயற்கை த்வாரங்கள் அமைந்திருக்கின்றன. இந்த த்வாரங்களின் உட்புறச் சுவர்களைப் போர்த்து உட்புறமாகப் பரவியுள்ள சர்மம் மிக்க மிருதுவாகவும், சென்னிறமாகவும் இருப்பதைப் பார்க்கலாம். இது சிறிது அல்லது அதிகமாய் சிலேஷ்மம் என்கிற கசிவுப் பொருள் அடங்கியதாயிருப்பதால்சிலேஷ்ம கலா என்று வழங்கப்படும். முன் கூறிய பாஹ்ய சர்மமும் இந்த சிலேஷ்ம கலை என்கிற த்வாரங்களில் உள்ள சர்மமும் அந்த நவ த்வாரங்களில் ஒவ்வொரு த்வாரத்தின் உதடு போன்ற பாகங்களில் கலந்து ஒருமிக்கச் சேருகின்றன. இவற்றுள் அனைத்துக்கும் மேலே (வெளிப்புறத்தில்) இருப்பது எபிடர்மிஸ் என்றும், மத்தியில் இருப்பது பபிலரிலேயர் என்றும் அனைத்துக்கும் அடியில் இருப்பது கியூடிஸ் அல்லது டர்மிஸ் என்றும் பபிலரி லேயருக்கு அடியில் அதற்கு ஆதாரமாயிருப்பது இந்த டர்மிஸ் என்கிற முக்கியமான சர்மம் என்றும் மேனாட்டு முறையில் வழங்கப்படும். கோரியம் என்கிற வேறு பெயராலும் வழங்கப்படும் இவ்வுட்சர்மம். வெறுங்

கண்ணுக்குப் புலப்படாத மிகவும் மெல்லிய சவ்விழைகளால் பின்னப்பட்டுள்ளது.

பாதங்கள் (உள்ளங் கால்கள்) உள்ளங்கைகள்போன்று வெளியில் தேய்வுறக்கூடிய அவயவ பாகங்களில் இச்சர்மங்கள் (முக்கியமாய் அந்தச் சர்மம்) அதிக கனமாகவும், அக்குள், துடையிடுக்கு, கழுத்துபோன்று உட்புறமாய் அடங்கி தேய்வுறாமலிருக்கக் கூடிய பாகங்களில் மெல்லியதாகவும் அமைந்துள்ளன. அந்தச் சர்மம் என்கிற உட்புற சர்மத்தில்தான் உணர்ச்சி நரம்புகள் ஏராளமாகப் பரவியிருக்கின்றன. இப்புரணியிலேயே ஜீவமர்மங்கள் என்கிற உயிர்ச்சத்துக்களை உள்ளடக்கிய சர்ம ஸம்பந்தமான நுண்ணிய கண்ணறைகள் அடங்கியுள்ளன.

சர்மம் நமது தசை நார்களையும், இரத்தக் குழாய்களையும், நரம்பு மண்டலத்தையும், குடல் முதலிய உட்புற அவயவங்களையும் போர்த்துப் பாதுகாக்கும் உபயோகத்திற்காக மாத்திரம் அமைந்தில்லை: ஆனால் வேறு பல இயற்கை வேலைகளையும் இடையறாது செய்து நமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத வகையில் உபயோகமாகின்றது. புப்புஸங்கள் (சுவாஸப் பைகள்) மூலமாய் நாம் ச்வாஸிப்பது (மூச்சுவிடுவது) போலவே சர்மத்தின் மூலமாகவும் அவ்வேலையை நாம் உணராமலே செய்து வருகிறோம். கண்களால் காணக்கூடாத (ச்வாஸ வேலை செய்யும்) இந்த நுண்ணிய மூச்சுவிடும் த்வாரங்களை, கடுங் குளிரிலன்றி மற்றச் சமயங்களில் கனமான துணிகளாலும் உடைகளாலும் அழுத்திப் போர்த்து வைப்பதால், சர்மத்தின் சுகநிலைமையும், பொதுவாக தேகாரோக்கியமும் பல வகையில் சீர்கெட்டுப் போம். தேகத்தில் அப்போதைக்கப்போது உற்பத்தியாகும் அசுத்த நீரை மூத்திராசயங்கள் அடிக்கடியும் வெளிப்படுத்துவதுபோலவே, சர்மத்திலடங்கிய ஸ்வேதக்கிரந்திகளும் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் மூத்திர நீர்போன்ற வியர்வை என்னும் அசுத்தமான கழிவு நீரை இடைவிடாது வெளிப்படுத்தி, உடலைச் சுத்தம் செய்து வருகின்றன. மேதோ கிரந்திகள் (நிணநீர் கோளங்கள்) என்கிற உட்புற சர்மத்திலடங்கிய சிற்றவயவங்களிலிருந்து மயிர்க்கால்களினூடே நாம் உணராமலே அடிக்கடியும் சுவரும் கொழுப்புப் பதார்த்தம் ஜீவித காலம் முடிய நமது சர்மத்தை மிருதுவான நிலைமையில் வைத்திருக்க உதவுகிறது. இவ்வேலை எப்பொழுதும் நடைபெறாமற்போனால், நமது சர்மம் மெதுத்தன்மையிழந்து செதில்செதிளாக வெடித்து விகாரங் கொள்ளும். சர்மம் பார்ப்பதற்கு உடலனைத்தையும் மூடும் விசாலமான போர்வை போலக் காணப்பட்டாலும் கண், காது முதலியவற்றைப்போன்ற ஓர் இந்த்ரியமாகவும் (உணரும் உருப்பு) இருக்கிறது. அதன் உணர்ச்சியையே பரிசம் என்கிறோம். சூடு, குளிர், கடினம், மிருது முதலிய குணங்களை மாத்திரமல்ல, ஸகல வஸ்துக்களின் உருவங்களையும் அவற்றின் பாகுபாடுகளையும் சர்மமானது, கண்ணின் உதவியின்றியும் பரிச உணர்ச்சியால் நமக்குத் தெரிவிக்கும் சக்தியுடைய அருமையான உருப்பாகும்.

இவ்வளவு உபயோகமுள்ள சர்மத்தை நாம் ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் பாதுகாக்க நாம் விசேஷ முயற்சியெடுத்துக் கொள்ளாவிடினும், அது இயற்கையின் உதவியினால் அழுக்கைப் போக்கிக்கொள்ளவும், சுத்தமாயிருக்கவும் தனக்குத்தானே வேலை செய்து வருகிறது. சர்மத்தையும், முகத்தையும் ஆரோக்கியமாகக் காப்பதற்காக முக்கியமான சில சுகாதார முறைகள் உண்டு. வெயிலிலும் காற்றிலும் அடிபடும்படி முகத்தையும் உடலையும் திறந்து திரிபவருடைய சர்மம் ரூக்ஷமாகவும் (கரடு கட்டியும்), மிகச் சென்னிறம் அல்லது கருநிறமடைந்தும், சுத்தம் செய்யப்படாததுபோலவும் காணப்படும். தினந்தோறும் அழுக்குப்போகத் தேய்த்து ஸ்நானம் செய்வதால், மயிர்க்கால் த்வாரங்களில் சேரும் அழுக்குகள் அகற்றப்பட்டு, வியர்வை முதலியது வெளிப்பட்டு, வெளிக்காற்று சர்மத்தின்மேல் பரவி, அதன் மூலமாய் நடைபெறும் ச்வாஸ வேலையும் இனிது நடைபெறும். "அப்யங்கம் ஆசரேந் நித்யம்"— (தினந்தோறும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வது அவசியம்)—என்கிற முறையை அனுஸரித்து நாள்தோறும் தைலம் தேய்த்து ஸ்நானம் செய்வதுடன், அதிகாலையிலும் இரவில் படுக்கப் போகுமுன்பும் வெந்நீரால் முகத்தைநன்றாகக் கழுவித் துடைத்துக்கொள்வதால், முகத்திற்குத் தெளிவும் ஆரோக்கியத் தோற்றமும் அதிகரிக்கும்.

சுருக்கங்கள், வெடிப்புகள் முதலிய சோளாறு ஏற்பட்டுள்ள சர்மத்தின்மேல் லாக்ஷா சந்தநாதி தைலம் என்கிற தைலத்தை நன்றாகத் தேய்த்து, பிறகு தசாங்க லேபம் என்கிற சூர்ணத்தையும் வெந்நீரையும் போட்டு, நன்றாகக் கழுவி தினந்தோறும் சுத்தம் செய்ய, காலக்கிரமத்தில் அக்கோளாறு முற்றிலும் மறையும்.

குல பரம்பரையையும், தேச நிலைமைகளையும் அனுஸரித்து அவரவரது சர்மத்தின் நிறம் அமைகிறது. மாதா பிதாக்களுடையவும் அவரது மூதாதைகளுடையும் உடல் நிறத்தைப் பொருந்தியதாயிருக்கும் அச்சந்ததியில் பிறக்கும் குழந்தைகளின் தேகநிறமும். மிகக் குளிர்ச்சியான ஐரோப்பா போன்ற நாடுகளில் பரம்பரையாகப் பிறந்து வளர்பவரின் உடல் நிறம் வெண்மையாகவும், அமித உஷ்ணமான ஆப்ரிக்காவிலுள்ள சில பிரதேசங்களைப் போன்ற நாடுகளில் பிறந்து வளரும் நீக்ரோ ஜாதியைப் போன்றவரது உடல் நிறம் மிகக் கருப்பாகவும், இந்தியாவைப்போன்ற மித சீதோஷ்ண தேசங்களில் உள்ள ஜனங்களுடைய தேகம் பழுப்பு நிறமாகவும், சைனா. ஜப்பான் போன்ற நாடுகளிலுள்ளவர்களுடைய சர்மத்தின் நிறம் மஞ்சளாகவும் இவ்வாறு சீதோஷ்ணாதி குணங்களை அனுஸரித்து அமைவதை நாம் பார்க்கிறோம்.

அவரவரது சர்மம் எந்நிறமாயிருந்தபோதிலும், அதன் உபயோகங்களிலும் காரியங்களிலும் வித்தியாஸம் இல்லை. சர்மத்தைச் சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் நாம் அப்யங்கம் (தைலம் தேய்ப்பது) தேய்த்துக் குளிப்பது முதலிய பராமரிப்புகளால் கவனித்து வந்தால், அது எவ்வித நிறமுள்ளதாயிருந்தபோதிலும் அது நமது தேகாரோக்கியத்துக்குச் சாதகமாகவே இருக்கும். தைலம் தேய்ப்பது, மர்த்தநம் செய்வது முதலிய விசேஷ முறைகளைக் கொண்டு சர்மத்தின் மேன்மையையும் முக தேஜஸ்ஸையுங்கூட நாம் விருத்திசெய்துகொள்ளலாம்.

———

தந்தை எலியார் அன்று வந்த கடிதத்தைப் படித்துவிட்டு குதி குதி என்று குதித்தது. தாய் எலி அம்மை ஓடி வந்து என்ன என்ன என்று கேட்டது. தந்தை எலியார் கடிதத்தை அதன் முகத்திலேயே விட்டெறிந்தது. தாய் எலியம்மை கடிதத்தைப் பிரித்துப் பார்த்தது. அது சம்பந்தி வீட்டாரிடமிருந்து வந்திருந்தது. அதில் "உங்கள் பெண்ணை கார்த்திகைக்கு அழைக்க எண்ணியுள்ளோம். அதற்கு வெள்ளியில் ஒரு குத்து விளக்கும், ஒரு மூட்டை அரிசியும், ஒரு மூட்டை கோதுமையும், நெய்யாலான பக்ஷண வகைகளும் கொண்டு வைக்க வேண்டும். இந்த சாமான்களோடு உங்கள் பெண்ணைக் கொண்டுவிடாவிடில் இனி உங்கள் பெண்ணை எங்கள் வீட்டிற்கு அழைக்கமாட்டோம். உங்கள் வீட்டோடு இருக்க வேண்டியதுதான்"— என்று கண்டிருந்தது.

இந்தக் கடிதத்தைப்பார்த்துவிட்டு எலி அம்மை "இதென்ன கஷ்டம்? இந்த ரேஷன் காலத்தில் அரிசிக்கும் கோதுமைக்கும் எங்கு போவது? வெள்ளி விற்கிற விலையில் விளக்கு எப்படி பண்ணுவது? என் பெண் வாழா வெட்டியாகி விடுவாளே" என்று வருத்தப்பட்டது.

"நான் அப்பொழுதே இந்தச் சம்பந்தம் நமக்கு வேண்டாமென்று சொன்னேன், நீ கேட்டாயா?' மிலிடரி ஆசாமிகளுக்கான அரிசிக்கிடங்கில் குடியிருக்கிறார்கள். நம் பெண் வயிறு நிறைய சாப்பிடும் சாப்பாட்டுக்குப் பஞ்சமில்லை என்று அவர்கள் வீட்டில் சம்பந்தம் செய்துகொண்டாய். பார்த்தாயா அவர்கள் லக்ஷணத்தை. என் பெண் வாழா வெட்டியாக இருந்தாலும் நான் அவர்கள் கேட்டதைக் கொடுக்கப்போவதில்லை" என்று தந்தை எலி உறுமிற்று.

பெண் எலி செய்வதொன்றுமறியாமல் கண்ணீர்விட்டது. கார்த்திகையை சாக்கிட்டு புக்ககம் போய் புருஷனை கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டிருக்கலாம் என்று அது எண்ணியிருந்தது. பாவம், அதன் ஆசையில் மண் விழுந்தது. தந்தை எலியார், தான் சொன்னபடியே கடிதமும் எழுதிவிட்டது.

சம்பந்தி எலியார் இந்தக் கடிதத்தை தன் மனைவிக்குப் படித்துக் காண்பித்தது. சம்பந்தி எலியம்மை "ஓஹோ, இவ்வளவு திமிரா இவர்களுக்கு. நான்பெண் கொடுத்த சம்பந்தி வீட்டில் என்னை எப்படி படுத்தினார்களோ, அதே போல்நானும் இவர்களைப்படுத்தாமல் விடப்போவதில்லை. எவ்வளவு நாட்கள்தான் இவர்கள் தங்கள் பெண்ணை வீட்டோடு வைத்துக்கொள்கிறார்கள், பார்ப்போம்" என்று சத்தம் போட்டு உறுமிற்று.

பிள்ளை எலிக்கு இதைக் கேட்டதும் வருத்தமாகப் போயிற்று. அம்மா, அப்பா கீறின கோட்டை தாண்டாத பிள்ளை அது. கார்த்திகைக்கு மனைவி வருவாள், அவளுடன் ரகசியமாகப் பேசலாம் என்று அது எண்ணியிருந்தது. பாவம்

அதன் ஆசையிலும் மண் விழுந்தது. அப்பொழுது அதன் தோழன் எலியார் அங்கு வந்தது. பிள்ளை எலி அதனிடம் ரகசியமாக தன் குறைகளைச் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டது.

கார்த்திகை திரு நாளும் வந்தது. இரு தரப்பாரும் அசைந்து கொடுக்கவில்லை. பெண் எலி ஏங்கி ஏங்கி அழுதது. பிள்ளை எலி விசனத்தால் மெலிந்தது. அன்று காலை சம்பந்தி எலி அம்மை தனியாக வீட்டில் எல்லா வேலைகளையும் செய்துகொண்டிருந்தது. 'ஒண்டியாக திண்டாடுவதைவிட நாட்டுப் பெண்ணை அழைத்து' கூட உதவிக்கு வைத்துக்கொள்ளலாமே' என்று பிள்ளை எலி மனதில் நினைத்துக்கொண்டது. வாய் விட்டுச் சொல்ல பயம்.

அப்பொழுது தோழன் எலி அங்கு வந்தது. அதன் கையில் ஒரு பாட்டில் இருந்தது. தோழன் எலி அதை "பிள்ளை எலியிடம் கொடுத்து, இதைப் பத்திரமாக வைத்திரு, நான் மாலையில் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போயிற்று. பிள்ளை எலி அந்தப் பாட்டிலை உள்ளே எடுத்துப்போய் அதன் மேல் 'இதை குடிப்பவர்கள் சுகமனுபவிப்பார்கள்" என்றுஎழுதியிருந்ததைப் படித்தது. விசனத்தில் மூழ்கியிருந்த அதற்கு அந்தப்பாட்டிலில் இருப்பதைக் குடிக்க சபலம் தட்டிற்று. முதலில் கொஞ்சமாகக்குடித்தது.பிறகு இன்னும் கொஞ்சம் குடித்தது. இப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாக பாட்டிலில் இருந்ததை முழுவதும் குடித்துவிட்டது.

அவ்வளவுதான். மெதுவாக அது தள்ளாடி தள்ளாடி

விழுந்தது. பிறகு ஆடிற்று, அர்த்தமில்லாமல் பேசிற்று, பாடியது. தன் தாயை அடித்தது. பிறகு தன் தாயையே கட்டிக்கொண்டது. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் பேசியது. இதன் நடத்தையைப்பார்த்துவிட்டு அதன் தாய் எலி மிகவும் பயந்துபோய்விட்டது. பிள்ளை எலியை என்ன அடக்கியும் அது அடங்கவில்லை. அதன் தந்தை எங்கோ வெளியில் சென்றிருந்தது. அதன் தாய் எல்லா தெய்வங்களையும்வேண்டிக்கொண்டது. கடைசியில் பிள்ளை எலி மூர்ச்சைபோட்டு கீழே விழுந்தது. அதன் தாய் அதன் பக்கத்தில் உட்கார்ந்து கண்ணீர்விட்டது.

அப்பொழுது தாடி வளர்த்து, மூக்குக்கண்ணாடி போட்ட ஒரு சாமியார் எலி அங்கு வந்து] "அம்மா, ஒரு கவளம் அன்னம் போடுங்கள், என்றது. சட்டென அதன் பார்வை பிள்ளை எலிமீது விழுந்தது. சாமியார் எலி உடனே பிள்ளை எலியின் ஜாதகத்தைக் கேட்டது. ஜாதகத்தைப் பார்த்துவிட்டு "நாட்டுப் பெண் இல்லையோ" என்று கேட்டது. சம்பந்தி எலியம்மை மெதுவாக "இல்லை" என்றது. "அதானே பார்த்தேன். நல்ல வேளையாக நான் இங்கு இப்பொழுது வர நேர்ந்தது.இந்தப் பிள்ளையின் ஜாதகப் பிரகாரம் இது தன் மனைவியைவிட்டு இன்றைய தினத்திலிருந்து இன்னும் 7½ வருடத்திற்குப் பிரிந்திருக்கக்கூடாது. பிரிந்தால் உயிருக்கு ஆபத்துதான்" என்றது. ஒரு விபூதி பொட்டலமும் கொடுத்தது. "அப்படியா" என்று சொல்லிக்கொண்டே, சம்பந்தி எலியம்மை தன் பிள்ளை எப்படியாவது உயிருடன் இருந்தால் போதும் என்று எண்ணிக்கொண்டே, நாட்டுப்பெண்ணை அழைத்து வர ஆட்களை அனுப்பிற்று. நாட்டுப் பெண் எலியும் வந்தது. பிற்பகல் 2-மணிக்கு மெதுவாக சுய நினைவை அடைந்தது பிள்ளை எலி. தன் வீட்டில் தன் மனைவியைப் பார்த்து ஒன்றும் தெரியாமல் முழித்தது.

மாலையில் தோழன் எலி வந்து தன் பாட்டிலை திருப்பிக் கேட்டது. பிள்ளை எலி அதிலிருந்ததை தான் குடித்துவிட்டதாகவும், தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டது. அதற்குத் தோழன் எலி "சரி போ, மன்னித்துவிட்டேன், வீட்டில் மனைவி வந்து

விட்டாள்போலிருக்கிறதே" என்றது. பிள்ளை எலி வெட்கி தலை குனிந்தது. தோழன் எலி பெரிதாக சிரித்துவிட்டு "எப்படி என் யோசனை" என்றது. பிள்ளை எலி ஒன்றும் தெரியாமல் முழித்தது.

"ஓஹோ தெரியவில்லையா. நீ மனைவிக்காக ஏங்கி தவித்ததைப்பார்த்தேன். உடனே எங்கோ சென்று ஒரு சாராய புட்டி திருடி வந்தேன். நம் ஊரில் சாராயம் இல்லையாதலால் சாராயம் குடித்தால் என்ன ஆகும் என்று நாம் பார்த்ததில்லை. நான், நீ குடிக்க வேண்டுமென்றே அந்தப்புட்டியை உன்னிடம் கொடுத்தேன். நீ குடித்துவிட்டு ஆடினதைப் பார்த்து உன் தாய் பயந்துவிட்டாள். நான் சாமியார் வேஷம் போட்டு வந்து வேண்டுமென்றே உன் ஜாதகத்தைப்பார்த்து இன்னும்

$7\frac{1}{2}$ வருஷத்திற்கு உன் மனைவியை விட்டுப் பிரியக்கூடாது என்று சொன்னேன். இனி ஒரு நாளல்ல, இன்னும் $7\frac{1}{2}$ வருஷத்திற்கு நீ உன் மனைவியைவிட்டுப் பிரியமுடியாமல் செய்து விட்டேன் போ. இதற்கு எனக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறாய்?" என்று சொல்லிற்று தோழன் எலி.

"அட பாவி, சாராயமா கொடுத்தாய். அடேய் இனி எக்காரணத்தைக் கொண்டும் சாராயம் வேண்டாமடா, அது மகா பாப காரியமடா" என்றது பிள்ளை எலி.

"நீ இனி கேட்டாலும் சாராயம் கிடைக்காது. மதுவிலக்கு அமுலுக்கு வந்து விட்டது." என்றது தோழ எலி.

எலியாரின் வீட்டில் கார்த்திகையின் திருவிளக்கை நாட்டுப்பெண் திவ்யமாக ஏற்றி வைத்தது. பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தோழன் எலி அன்று இரவு அங்கு விருந்துண்டது.

பிள்ளை எலி, தோழ எலியையும் தவிர மற்ற எல்லோரும் சாமியாரின் ஜாதகப் பலனில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.



இந்தியாவின் வீட்டுப் பிரச்னையை தவிர்க்க ரெடிமேட் வீடுகள் உற்பத்தி செய்யப்போவதாக சில தினங்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளிவந்ததல்லவா? இந்த ரெடிமேட் வீடுகள் அலுமினிய கலப்பு உலோகத்தாலும் ஒருவித பிரத்யேக காங்கிரீட்டாலும் கட்டப்படுகின்றனர். இவ்விதம் வீடுகள் தயாரிப்பதற்கான முறையை பிரிட்டிஷ் எஞ்சினீரிங் கம்பெனியொன்று சுமார் மூன்று வருடகால ஆராய்ச்சிக்குப் பின் கண்டுபிடித்திருக்கிறது. இத்தகைய முறையில் அமைந்த பங்களாவின் விலை ரூ. 2,650.

★

(மேல்)

சில நாட்களுக்கு முன்பு பண்டித நேரு அலஹாபாதுக்குப் போயிருந்தபோது அங்குள்ள கமலா நேரு (நேருவின் காலஞ்சென்ற மனைவி) ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டார். ஆஸ்பத்திரி கட்டிடத்தைப் படத்தில் காண்க.

(கீழ்)

புதிய டில்லி அ. இ. பால்கன்-ஜி. பாரியின் ஆதரவில் சமீபத்தில் நடந்த குழந்தைகள் விழாவில் பிரதம மந்திரி நேரு, தனக்கு மாலே சூட்டிய குழந்தையைச் செல்லமாகத் தட்டிக்கொடுக்கிருர்.

★



நாமொன்று நினைக்க----!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ.பி.எல்.

நாம் சியாமளாம்பாபுர விருத்தாந்தத்தை அறிந்து 5, 6 நாட்களாகி விட்டன. அதைத் தொடர்வோம்.

சேஷு சாஸ்திரிகள் மணியை ரயிலுக்கு அனுப்பிவிட்டுத் தன் புதல்வனைப்பற்றிய உண்மைச் செய்தியை உணர ஆத்திரத்தினால் ஒரு நாளை ஒரு யுகமாகக் கழித்தார். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் தந்தி வந்ததா, தபால் வந்ததா, மணி திரும்பி வந்தாரா என்று விசாரிக்க நாகுவிடம் ஆள் அனுப்பிக்கொண்டிருந்தார். தபால்காரனையும் பரிதாபத்துடன் "எனக்கு ஒன்றும் கிடையாதா" என்று கெஞ்சினார். ஒவ்வொரு நாளும் ஒன்றும் தகவல் கிடைக்காததால் ஏமாற்றமடைந்தார். கடைசியில் நான்காவது தினம் காலையில் ஒரு தந்தியையும் தபாலையும் ஸீதாராமன் பெயரை விசாரித்துக்கொண்டு தபால்காரன் சேஷு சாஸ்திரிகள் கையில் கொடுத்தான். சேஷு சாஸ்திரிகள் தன் பேருக்குத் தந்தியும் தபாலும் வரவேண்டியிருக்க ஸீதாராமன் பெயருக்கு அவை வந்திருப்பதைப் பார்த்துத் திகைத்துப்போனார். அவை மணியால் அனுப்பப்பட்டவைகளானால் தன்பேருக்கல்லவா வரவேண்டும்! பின்னே இந்தத் தந்தியும் தபாலும் ஸீதாராமனுக்கு அனுப்பினது யார்! அவன் ஏதாவது லீவில் இங்கு வந்திருப்பதாய் நினைத்து யாராவது ஒரு நண்பன் அனுப்பியிருக்கலாமோ. அப்படி அனுப்பும் நண்பன் கடிதம் எழுதலாமே ஒழியத் தந்தி அனுப்புவது அஸம்பாவிதமாச்சே! ஒருவேளை ஏதாவது பரீட்சை தேறிய விஷயமாய் தந்தி வந்திருக்கலாமோ வென்றால் பரீட்சைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவே இல்லையே. இதென்ன மாயத்தந்தி! ஒருவேளை ஏதாவது அபாய எச்சரிக்கையாயிருக்கலாமோ. ஸீதாராமனைக் காணவில்லை என்ற வதந்திக்கு இந்தத் தந்தியும் தபாலும் ஆதாரமளிக்கின்றனவே! எந்த ஊர் தந்தி என்று தபால்காரனைக் கேட்கவும் மறந்துவிட்டேன். நேற்றிரவே தந்தி வந்திருப்பதாய்த் தெரிகிறது. இன்று காலையில்தான் தபாலுடன் டெலிவரியாகியிருக்கிறது. தந்தியும் தபாலும் சேர்ந்தாற்போல் யாரோ அனுப்பியிருக்கிறார்கள். தந்திக்கு வியாக்யானம் தபாலில் இருக்கிறது. இவைகளை அனுப்பினவர் ஸீதாராமன் இங்கு வந்திருக்கலாம் என்று நம்புவதாகத் தெரிகிறது. அவனோ இங்கு வரவில்லை. அவனைப் போலீஸ் தேடிக்கொண்டிருப்பதாகப் பரவியிருக்கும் வதந்திக்கும் இந்தத் தந்திக்கும் அவசியம் சம்பந்தம் இருக்கவேண்டும். அவனை யாரோ நண்பன் எச்சரித்திருக்கிறான். வேறு யார்? ராமனாதன்தான் எச்சரித்திருப்பான். அவன் தகப்பனார் ஸீதாராமனைக் கண்டுபிடிக்க எடுத்திருக்கும் போலீஸ் நடவடிக்கைகளுக்கு இவனை ஒளிந்துகொள்ள எச்சரிக்கை செய்து அனுப்பிய தந்திதான் இது. இதை யாரைக் கொண்டு வாசிக்கச் சொல்லலாம். விஷயமோ பரமரகஸியம். பட்டாமணியாரனுக்கு இங்கிலீஷ் தெரியும் என்றாலும் அவன் ஊரில் தண்டோராப் போட்டு விடுவான். மேலும் போலீஸுக்கே எழுதி ரகஸியமாய் விஷம வேலை செய்து விடுவான். மணிக்கு ஆங்கிலம் தெரியும். அவனோ ஊரில் இல்லை. மெட்ராஸ் போன மணி எனக்குக் கடிதம் எழுதாததற்குக் காரணம் நல்ல சமாசாரம் ஒன்றும் இல்லை என்பதுதான் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் மூன்று நான்கு நாட்களாய் மணி ஒன்றுமே எழுதாமலும் ஊருக்குத் திரும்பி வராமலும் இருப்பானோ! மணி அங்கு போனவன் பணத்திற்கு ஈடு செய்துவிட்டுச் சமாதானம் செய்ய ஏன் தாமதிக்கிறானோ? பணத்தினால் சமாதானம் ஆகக் கூடியதாயில்லைபோலிருக்கிறது. ஒரு வேளை ஐயரிடம் நேரில்போக பயந்துகொண்டு அங்குமிங்கும் துப்பு விசாரித்துக்கொண்டிருக்கிறான்போலும். இதனால் ஸீதாராமன் பட்டணத்திலும் நிச்சயமாயில்லை என்று தெரிகிறது. சியாமளாம்பாபுரத்திலும் இல்லை. பின்னே எங்கேதான் போய்விட்டான். ஐயோ! ஒன்றும் புரியவில்லையே! அம்பிகே! என்னை இப்படித் தவிக்க விட்டு நீ வேடிக்கை பார்க்கிறாயே—உனக்குத் தயவில்லையா?—உன்னை நான் அல்லும் பகலும் ஜபத்தினாலும் தபத்தினாலும் உபாஸிக்கவில்லையா?–"இவ்விதம் பிரலாபித்துக்கொண்டு சேஷு சாஸ்திரிகள் மூர்ச்சை அடைந்தவர்போல் உட்கார்ந்தவிடத்தில் பின்னாலே சாய்ந்தார். வேம்பு அவர் பக்கத்திலிருந்து விசிறி எடுத்து விசிறி ஆச்வாஸப்படுத்தினார். சற்று அவர் கண் திறந்ததும்—" வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவானேன், போஸ்ட் மாஸ்டரிடம் காண்பித்து விவரம் தெரிந்துகொண்டால் போகிறது. ஒரு வேளை நல்ல சமாசாரமாகவே இருக்கலாமல்லவா? நீங்கள் எப்போதும் கெட்டதையே நினைத்துக்கொண்டு புலம்புவது சுபாவமாயிருக்கிறது. எனக்கு என்னமோ இதில் அச்சம் ஒன்றும் இருக்கும்

என்று தோன்றவில்லை. இங்கிலீஷ்ப்படிப்பை எப்போதும் தூஷித்துக் கொண்டிருப்பீர்களே—அது இருந்தால் அதுவும் ஒரு சமயத்துக்கு உதவத்தான் உதவும். போஸ்ட் மாஸ்டர் நல்லவர், மேலும் அவர் அறியாமல் தந்தி வரமுடியாது. அவரிடமே முதலில் தந்தியையும், பிற்பாடு காண்பிக்கலாம் என்று தோன்றினால் லெட்டரையும் காண்பித்து விஷயத்தை தெரிந்துகொள்ளுங்கள். மத்தியானம் ஆத்திற்குச் சாப்பாட்டிற்கு அவர் வருவார். அவரைப்போய்ப் பார்த்து வாருங்கள்'' என்று உபதேசம் செய்தான்.

சேஷு சாஸ்திரிகள் ''கொஞ்சம் மோர்த்தீர்த்தம் கொண்டுவா'' என்று கேட்டு வாங்கி சாப்பிட்டுவிட்டு பஞ்சகச்சத்தைச் சரிபடுத்திக்கொண்டு, அங்கவஸ்திரத்தையும் பிரித்து மேலே போர்த்துக்கொண்டு, தந்தி தபால்களை பத்திரமாய் ஒரு துணியில் சுற்றி இடுப்பில் சொருகிக்கொண்டு போஸ்ட் மாஸ்டரைப் பார்ப்பதற்காக வெளியே கிளம்பினார்.

போஸ்ட் மாஸ்டர் வீட்டில் மனுஷ்ய நடமாட்டம் இருப்பதாகவே தெரியவில்லை. சாஸ்திரிகள் சற்று திண்ணையில் உட்கார்ந்து பார்த்ததும் சற்று ரேழியில் நின்றுகொண்டுப் பலகனைப்புகள் கனைத்துப் பார்த்தும் ஒன்றும் பயன் படாததினால் இரண்டு வாசற்படிதாண்டி உள்ளேசென்று முன்னடித்தாழ்வாரத்தில் நின்றுகொண்டு, ''போஸ்ட் மாஸ்டர் வந்துட்டாரோ?'' என்று சந்தேகத்துடனும் பயத்துடனும் குரல் கொடுத்தார். அப்பொழுது சமயல் அறையிலிருந்து தலையைச் சிறிது வெளியே நீட்டிய ஒரு மாது—'' அவர் இன்று வரவில்லை என்று சொல்லிக் கையில் டிபன் எடுத்துக் கொண்டு போய்விட்டார்'' என்று பதிலளித்தாள். சாஸ்திரிகள் மிக்க ஏமாற்றத்துடன் உடனே தான் வந்த வழியே திரும்பினார். வேம்புவின் வார்த்தைக்காக அவர் போஸ்ட் மாஸ்டரைப் பார்க்க நினைத்தாரே ஒழிய, உண்மையில் அவருக்கு அத் தந்தி கடிதங்களின் ரகசியத்தைத்தான் அறியாமல் பிறருக்குப் பிரகடனம் செய்வதில் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. சாஸ்திரிகள் வீட்டிற்குத்தான் திரும்பினார். ஆனால் நடுவே குறுக்கிட்ட ஒரு சந்து, மணி இருக்கும் தெருவுக்குக் கொண்டுபோய்விடக் கூடியது. அந்தச் சந்தைத்தாண்டும்பொழுது சேஷு சாஸ்திரிகள் ''இவ்வளவு தூரம் வந்ததுதான் வந்தோம். மணி வீட்டைப் பார்த்துவிட்டுத்தான் போவோம். ஏதாவது கடிதம் இன்று வந்திருக்கலாமல்லவா'' என்று நினைத்துக்கொண்டு அந்தச்சந்தில் நுழைந்தார்.

மணி வீட்டு வாசல் கதவு அடைத்திருந்தது. ''புருஷர்கள் யாரும் வீட்டில் இல்லை என்பது நிச்சயம்'' சேஷு சாஸ்திரிகள், ''நாம் புறப்பட்டவேளை அப்பேர்ப்பட்டது'' என்று நொந்துகொண்டு நேராக நடந்தார். மேற்கே சென்று குளக்கரை வழியே போனால் தன் வீடு சமீபமாகையால் அந்த வழியை அனுசரித்தார்.

அந்தத்தெருக்கோடியில் ஜோஸ்யம் ராகவ ஐயங்கார் வீடு. சேஷு சாஸ்திரிகளுக்கும் ஐயங்காருக்கும் நல்ல நட்பு. அந்த ஊருக்கே ஐயங்கார்தான் ஜோஸ்யர். அவர் பெயர் அந்த ஜில்லாவிலேயே பிரஸித்தம். சேஷு சாஸ்திரிகள் ஐயங்கார் வீட்டுவாசலில் ஐயங்காரின் புதல்வன் ரங்கசாமியைப் பார்த்தார். ஏதோ மனதில் சங்கல்பம் செய்துகொண்டு அவர் ஜோஸ்யர் வீட்டுப்படி ஏறினார். ரங்கசாமி வினயத்துடன் அவரை வரவேற்றுத் திண்ணையில் உட்காரச்செய்து, ''அப்பாவைக் கூப்பிடட்டுமா?'' என்று கேட்டான். சாஸ்திரிகள் ஏதோ ஜாதகம் பார்க்க வந்திருப்பதாக அவன் நினைத்ததில் ஆச்சரியமில்லை.

''அப்பா என்ன செய்கிறார்'' என்று கேட்டார் சாஸ்திரிகள்.

''இப்போதுதான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டார். இன்று சேவல்பட்டி பாடியூர் ஊர்களுக்குப் போய் விட்டு வெகு நேரம் கழித்துத்தான் வீட்டுக்கு வந்தார்.'' என்றான் ரங்கசாமி.

''சரி. அப்படியானால் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். படுத்துக்கொண்டிருக்கட்டும். நானும் ஒரு விசேஷ காரியமாக வரவில்லை. உன்னால்தான் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டும்''

''என்னாலா? என்ன காரியம்?''

''ஒன்றுமில்லை. இன்று ஒரு தந்தி வந்தது. அதைப் படிக்க எங்கள் தெருவில் ஒருவருமில்லை. அதற்காகத்தான் இந்தப்பக்கம் வந்தேன்''

''அடடா, இதற்கா இவ்வளவு சிரமம் வெய்யிலிலே- இங்கே கொடுங்கள் பார்ப்போம்''

சாஸ்திரிகள் தந்தியை ரங்கசாமியிடம் கொடுத்தார். கொடுக்கும்போது அவர் கை நடுக்கமுற்றது. கண்கள் குழம்பின. நெஞ்சில் வார்த்தை அடைத்துக்கொண்டது.

ரங்கசாமி தந்தியை ஆராய்ந்து பார்த்தான். ''மெட்ராஸிலிருந்து ராமனாதன் அடித்திருக்கிறான்—ஸீதாராமனுக்கு''

''சரிதான்! நான் நினைத்தது சரியாய் போய்விட்டது. போலீஸ் தொடர்கிறார்கள் ஜாக்கிரதை. என்ற எச்சரிக்கைதானே? சரி போதும்; கொடு'' என்று துடிப்புடன் சேஷு சாஸ்திரிகள் எழுந்து தந்தியை ரங்கசாமியிடமிருந்து கைப்பற்ற முயன்றார்.

ரங்கசாமி அதற்கு இடங்கொடாமல், பேசினான். ''இருங்கோ, மாமா! அவசரப்படுகிறீர்களே! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் வாசித்துச் சொல்கிறேன் கேளுங்கள்; 'எல்லாவற்றையும் வெளிப்படுத்திவிட்டேன்' நீ இனிப் புறப்பட்டு வரலாம்' என்பதுதான் விஷயம். கடிதம் எழுதியிருப்பதாயும் கண்டிருக்கிறது''

''எது எல்லாம் வெளிப்படுத்தப்பட்டது? ஒன்றும் புரியவில்லையே-?''

''கடிதம் ஒன்று வந்திருக்கிறதா?''

''ஆம். வந்திருக்கிறது''

சாஸ்திரிகள் அவநம்பிக்கையுடனும் அச்சத்துடனும் கடிதத்தை ரங்கசாமியிடம் மெல்ல மெல்ல நீட்டினார். ரங்கசாமி கடிதத்தை வாங்கிப் படித்துப் பார்த்தான். பின்வருமாறு சாஸ்திரிகளுக்கு மொழிபெயர்த்துச் சொன்னான்:

"என் அருமையான நண்பன் ஸீதாராமனுக்கு, முதலில் நான் செய்த அடாத செயல்களால், நிரபராதியான அவைகளில் சிறிதும் சம்பந்தப்படாத உனக்கு அசௌகர்யமும் அபவாதமும் விளைவித்ததற்கு உன்னை நான் ஆயிரம் தடவை மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இன்று மாமா சிவராமன் இங்கு வரவும் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. அப்பா ஊரில் இல்லை. காந்திமதியின் கல்யாணம் நிச்சயம் செய்ய நாக்பூர் போயிருக்கிறார். மாமாவிடமும் அம்மாவிடமும் ஒன்றை ஒளிக்காமல் வெளியிட்டு விட்டேன். அம்மாவுக்குக் கடும் கோபம். அப்பா வந்தால் என்ன நடக்குமோ தெரியாது. நான் குடும்பத்தை விட்டு வெளியேறுவது நிச்சயம். என் நடத்தைகளுக்கு நானே ஜவாப்தாரி. உனக்கு ஒன்றும் இடஞ்சல் இல்லை, உடனே புறப்பட்டு வா. ஆண்டு முடிவுப் பரீட்சைக் காலமாகையால் இந்த வருஷப் படிப்பை வீணாகக் கெடுத்துக் கொள்ளாதே. என் படிப்பிற்கு நான் முற்றுப்புள்ளி போட்டுவிட்டேன். நான் பெரிய சுழலில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். ஆனால் நீ அப்படியல்ல. பரீட்சை எழுதக்கூடியவன். வேறு சிக்கல் இல்லாதவன். நான் கெட்டது மல்லாமல் உன் படிப்பையும் கெடுத்துவிட்டதாய் எனக்குத் தோன்றினால் நான் மிகவும் துக்கப்படுவேன். இந்தக் கடிதம் கண்டவுடன் புறப்பட்டுவிடு. உன் வரவை எல்லோரும் ஆதரவுடனும், அனுதாபத்துடனும் எதிர் பார்க்கிறார்கள். உன்னை உடனே நேரில் சந்திக்க ஆவலுடனிருக்கும்,

உன் அருமைத்தோழன்
ராமநாதன்.

"என்ன மாமா ரொம்ப பயந்தீர்களே. நல்ல சமாசாரமாய்த்தானே இருக்கிறது" என்றான் ரங்கசாமி.

"நல்ல சமாசாரம்தான் என்று வைத்துக்கொள்ளலாம். இருந்தாலும் ஸீதாராமன் பட்டணத்திலிருப்பதாய் நான் நினைத்துக் கொண்டிருக்கப் பட்டணத்திலிருக்கும் ராமநாதன் அவன் இந்த ஊரிலிருப்பதாய் நினைத்துக் கொண்டிருப்பது மனதிற்கு சமாதானத்தை அளிக்கவில்லை. ஸீதாராமன் மீது ஏதோ அரைகுறையாக குற்றச்சாட்டு இருந்து அது விலகியதாய்த் தெரிகிறது. ஆனால் ஸீதாராமன் இருக்குமிடம்தான் தெரியவில்லை—"

சேஷு சாஸ்திரிகள் தன் மனக் கலக்கம் தெளிவதும் மறுபடி மனம் குழம்புவதும் த்வனிக்கும் படியான இவ்வார்த்தைகளைப் பேசி முடிக்கு முன் உள்ளேயிருந்து ஜோஸியம் ராகவய்யங்கார் எழுந்து வெளியே வந்துகொண்டு "ஸீதாராமன் உங்கள் வீட்டிலேயே இருக்கிறான்" என்று அசரீரி வாக்குப்போல் பதில் கொடுத்தார். சாஸ்திரிகள் ஜோஸ்யர் வருவதைக் கண்டு "தூங்கி எழுந்திருந்துவிட்டீர்களோ. உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நினைத்தேன். வரும்பொழுதே ஜோஸ்யம் சொல்லிக்கொண்டு வருகிறீர்களே, வாருங்கோ" என்றார் சுபவாக்குக் கேட்டதில் அந்தரங்க சந்தோஷத்துடன்.

"தொந்தரவு என்ன! ஏண்டா பயலே! சாஸ்திரிகள் வந்ததும் என்னை எழுப்பக்கூடாதோ. தூக்கம் கிடக்கிறது தூக்கம். என் வீட்டிற்கு நீங்கள் வரும் பாக்யம் கிடைக்க வேண்டாமா! வந்து ரொம்ப நாழியாகிறதோ-பையன் சமத்துப் போதாது—உங்களோடு இவ்வளவு நாழி பேசிக்கொண்டிருந்தானே ஒழிய என்னை ஒரு குரல் கூப்பிடப்படாதோ எனக்கு ஆழ்ந்து தூக்கம் ஏது—இன்று பல ஊர்கள் அலைந்துவிட்டுத் திரும்பி வந்ததால் சற்று அசதியில் படுத்துவிட்டேன். ஆத்தில் கல்யாணம் வருகிறதுபோலிருக்கிறது. கோபாலைய்யர், ராமஸ்வாமி அய்யர் எல்லோரும் வந்திருக்கிறார்களே; நான் திரும்பி வரும்பொழுது எல்லோரும் உங்கள் மச்சினர் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நான் க்ஷேமம் விசாரித்தேன். ராமசாமி அய்யர் பேத்தியின் விவாஹ விஷயமாய் உங்களைப்பார்க்க வந்திருப்பதாய்ச் சொன்னார். ரொம்ப சந்தோஷம். நான் இரண்டு வருஷம் முன்னமேயே மணி சாஸ்திரிகளிடம் சொல்லிவிட்டேன். அவர் பெண் அத்தானுக்குத்தான் வாழ்க்கைப் படப் போகிறாள் என்று—" ஜோஸ்யர் நிமிஷத்திற்கு நூற்றிருபது வார்த்தைகள் பேசுகிறவரான படியாலும் அவருடைய குரல் சங்கநாதம்போல் பாம் என்று ஒலிக்கக்கூடியதானதினாலும் சேஷு சாஸ்திரிகள் அவருடைய வாக்பிரவாகத்தில் அடிப்பட்டு ஆச்சர்யத்தின் கரைகாணவியலாது தவித்துக்கொண்டிருந்து கடைசியில் மூச்சுத்திணறுபவர் போல்—" ராமஸ்வாமி அய்யரா? கோபாலைய்யரா? எங்கு வந்திருக்கிறார்கள்!—மணி ஊரில் இருக்கானே! ஸீதாராமனைப்பற்றி என்ன செய்தி, நீங்கள் பார்த்தீர்களா? உங்களுக்குத் தெரியுமா?—" என்று பாதிக்காற்றும் பாதிசப்தமுமாக உச்சரித்தார்.

அப்போது ஜோஸ்யர் ஆச்சர்யத்தினால் திக்கு முக்காடும் கட்டம் ஏற்பட்டது—.

"ஆனால் உங்களுக்குத் தெரியாதோ, நீங்கள் பார்க்கவில்லையோ. இப்போது ஆத்திலிருந்துதானே வருகிறீர்கள்?—"

"எனக்கு ஒன்றும் தெரியாதே! என்ன விவரம். நான் ஆத்தை விட்டுப் புறப்பட்டு இரண்டு நாழிகையாகிறது. இரண்டு மூன்று தெருக்களைப் பிரதக்ஷிணம் பண்ணிக்கொண்டு வருகிறேன்."

"சரியாய்ப்போச்சு. அப்போ அவர்கள் உங்களுடைய ஆத்தில் உங்களை எதிர்பார்த்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்-அதோ பாருங்

கள் அய்யாப்பயல் ஓடிவருகிறுன்—''

அய்யாப்பயல் ஓடி வந்தான். ''ஜோஸ்யர் மாமா,எங்க வாத்யார் இங்கே வந்தாரோ?'' சேஷு சாஸ்திரிகள், ''எலே யாரைடா தேடுகிறுய்?—'' என்று பரபரப்புடன் எழுந்தார். ''உங்களைத்தான்மாமா. ஸீதாராமன் வந்திருக்கிறுன். அன்னிக்குப் பொய் சொன்னேன் என்று என்னை அடித்தீர்களே-வந்து பாருங்கோ-மணிமாமா, உங்களைத் தேடிப் பார்த்துக் கூப்பிட்டுக்கொண்டு வரச்சொன்னுர். முதலில் போஸ்ட்மாஸ்டர் வீட்டுக்குப் போனேன். அப்புறம் போஸ்டாபீஸுக்குப் போனேன்-அப்புறம் தெருத்தெருவாய்த் தேடினேன்—நீங்கள் என்ன மாமா ஜோஸ்யர் வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறேளே. ஸரஸ்வதிக்குத் தாத்தா வந்திருக்கார். போலீஸ் கோபால் மாமா வந்திருக்கா. அம்மாமி ரவாவும் முந்திரிப்பருப்பும் கடையிலிருந்து வாங்கி வரச்சொன்னுள். வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, உங்களைத் தேடப் புறப்பட்டேன். இத்தனை நாழி டிபன்கூட ஆறிப்போயிருக்கும்—நீங்கள் என்னவென்ருல் ஜோஸ்யர் வீட்டில் வந்து ஸ்வஸ்தமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்''—முடிவில்லாமல் பேசிக்கொண்டேயிருந்தான் அய்யாப்பயல்.

சேஷு சாஸ்திரிகள் ஐயங்காரிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினுர். ஐயங்கார் சேஷு சாஸ்திரிகளை அனுப்பினுர். அய்யாப்பயல் பேச்சுக்களை காதில் வாங்கினதும் வாங்காததுமாய் சேஷு சாஸ்திரிகள் விரைந்து வழி நடந்தார். கூடவே அய்யாப்பயல் பேசிக்கொண்டே ஓடிவந்தான். இப்போது சேஷு சாஸ்திரிகள் அவனை அடிப்பார் என்ற பயம் அவனுக்கு இல்லை. இருவரும் வீடு சேரும் வரை அவன் ஊதல் த்வனி சாஸ்திரிகளின் காதுகளைச் செவிடுபடுத்தி வந்தது. ஆனல் சாஸ்திரிகள் அவனைக்கடிந்து கொள்ளவில்லை. சாஸ்திரிகளின் மனோரதங்கள் வானளாவைப்பரந்து கொண்டிருந்தன. சந்தோஷப் பூரிப்பினுல் அவர் வழிநடந்ததே அவருக்குத்தெரியாது.

தன் வீட்டில் அவர் நுழைந்ததும் அவர் கண்ட இன்பக்காக்ஷியும் அவர் காதில் பட்ட உத்சாக மொழிகளும் அவரை ஆனந்தப் பரவசமாக்கிவிட்டன.

சாஸ்திரிகளைக்கண்டதும் எல்லோரும் எழுந்து மரியாதை செய்து அழைத்தார்கள்.

ஸீதாராமன் பிதாவின் கால்களில் விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான்.

(தொடரும்.)

கட்டுரையாளருக்கு

★

''சுதேசமித்திரன்'' வாரப்பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறேம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

காஷ்மீர்-குஸும் என்ற மலர் மூலிகையை கூந்தல்வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P&Exd சாண்டலக்ஸ் நறுமண சந்தனக் களிம்பு தீப்புண், வெட்டு, சொறி, பரு, புண்களுக்கு (கூடிய உதவி).

M.R ஜெட்டப்பா அவர்களின் பிரேமலீலா மைசூர் ஊதுவத்திகள் எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 56, பந்தர் வீதி, மதராஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0 (தபால் செலவு ப்ரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

ராஜப்பாவின் முகத்தில் அப்போதுதான் ஒரு புதிய ஜீவகளை மெல்ல உருவெடுத்தது. அவனுடைய குழந்தை உள்ளம் இதழ்போல விரிந்து, அந்தப் புதிய விஷயத்தை உள்த்தாங்க இடம் அளித்தது.

பக்கத்து வீட்டில் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தான் ராஜப்பா; அவன் இளம் தோழன் மணி கையிலிருந்த ஒரு பம்பரத்திற்கு அடியில் ஆணி பொருத்துவதில் சிரத்தை காட்டிக் கொண்டிருந்தான்.

ராஜப்பாவின் உள்ளத்திற்கு உவகை அளித்த நூதன விஷயம் அவனைப் பொருத்தவரையில் ஒரு மகத்தான விஷயமே தவிர, மற்றப்படி சாதாரணமானதுதான்.

மறுதினம் சங்கராந்தி: மக்களை மகிழ்விக்கக்கூடிய மகாசக்தி வாய்ந்த திருநாள் அதுதான்; பழமையைப் போக்கி புதுமையைச் சொரியச் செய்யும் பிரசித்த தினம்.

மணியின் வீட்டுவாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த ராஜப்பாவின் கனைத்தை அந்த வஷயம் முற்றிலும் கவர்ந்து விட்டது; கவர்ந்ததுடனில்லாமல் அவன் மனதில் பெரிய பெரிய பிரச்னைகளைக் கிளப்பி, பெரும் புயல் வீசக்கூடக் காரணமாய்விட்டது.

தலையில் சுமந்து வந்த ஒரு கட்டுக் கரும்பையும், ஒரு கூடையையும் மணியின் வீட்டின் முன்பாகக் கொண்டுவந்து இறக்கினான் ஒரு ஆள்: கூடையில் அபூர்வமாகத் தென்பட்டு மனதில் இன்ப உணர்ச்சியை மூட்டக்கூடிய சில சாமான்கள்; இஞ்சிக்கொத்து, மஞ்சள் கொத்து, வாழைப்பழம் முதலியன......

மணியின் கைகளும் வேலை நிறுத்தம் செய்தன; ராஜப்பாவும் மணியை அர்த்தத்துடன் ஒரு தடவை பார்த்துவிட்டுக் கரும்புக் கட்டை நோக்கினான். அவன் கண்களும், உள்ளத்தைப்போல, அகல விரிந்தன.

“ராஜப்பா, இது எல்லாம் எதுக்குத் தெரியுமா? நாளைக்கி எங்காத்திலே சங்கராந்தியோன்னோ, அதுக்காகத்தான்” என்றான். மணியை விட ஒரு வயது சின்னவன்தான் ராஜப்பா; மூன்றரை வயதுதான். சின்னவனுக்குப் பெரியவன். புரியும்படிச் சொல்லும் தோரணையில் மணி சொன்னான் இதை. ராஜா கவனமாகக் கேட்டுக் கொண்டான்; மீண்டும் ஒரு முறை அவன் திருஷ்டி கரும்பின்மேல் சென்றது. அவன் வாய் தித்தித்தாற்போல ருசிக்கவும், வாயை அசைத்துக்கொண்டான். அந்தத் தித்திப்பு உள்ளத்திலும் இப்போது தித்தித்தது: அப்படி ஒரு உணர்வு குழந்தையின் உடம்பு பூராவிலுமே!

* * * * *

ராஜப்பா வீட்டுக்கு வந்ததும் தாயாரைத் தேடினான். ருக்மணி கொல்லையில் பாத்திரங்களைத் தேய்த்துக்கொண்டிருந்தாள்.

ஒரு வட்டம் சுற்றி வீட்டின் உள்பக்கம் தேடியபின்னர், கொல்லைப்புறம் வந்தான். ருக்மணியைப் பார்த்ததும் அவன் கேட்ட முதல் கேள்வி “அம்மா, சங்கராந்தின்னா என்ன? வெள்ளிக்கிழமையா?” என்பதுதான். அவனுக்கு மற்ற நாட்களின் கிழமை ஞாபகத்துக்கு வராது; ஒருவேளை தெரியாமலும் இருக்கும். ஆனால், வெள்ளிக்கிழமையை அவன் மறக்கமாட்டான். வெள்ளிக்கிழமைதோறும் ருக்மணி பாயசத்துடன் சமைத்து, சுவாமிக்கு பூஜை நைவேத்யம் செய்துவிட்டுத்தான் ராஜப்பாவுக்குச் சாதம் போடுவாள். பாயசத்தின் மகத்தான சக்தி அவனை வெள்ளிக்கிழமையையே மறந்து போகாமல் இருக்கும்படிச் செய்திருந்தது.

ருக்மணிக்கு அவன் கேள்வியும் அதற்கு அவனுடைய விடையும் சிரிப்பை மூட்டின. லேசாகச் சிரித்துவிட்டு, “சங்கராந்தின்னா வெள்ளிக்கிழமை இல்லேடா ராஜா; அதுவேறே, சங்கராந்தின்னா அது ஒரு பண்டிகை” என்றாள்.

“அதாம்மா நாளைக்கி மணியாத்திலே நடக்கப்போறது. அதுக்காகத்தான் இப்பவே எல்லாம் வந்துடுத்து; கரும்பு கிரும்பெல்லாம்...”

“மணியாத்திலே மாத்திரம் என்னடா அதிசயம், குழந்தை? நாளைக்கு எல்லார் ஆத்திலேயும் உண்டு.”

“அப்படீன்னா நம்மாத்துக்கு ஏன் அவன் கரும்பு கொண்டு வல்லே?”

“எவன்?”

“அவன்தான்: அந்த மணியாத்து ஆளு.”

“மணியாத்து ஆளு மணியாத்துக்குத்தான் கொண்டு வருவான்—” மேலே, சும்மா இழுத்து விட்டுவிட்டாள் ருக்மணி. சொல்ல நினைத்ததைச் சொல்ல நாக்கிற்குத் துணிவு வரவில்லை. சும்மாயிருந்தாள்.

ராஜப்பா மேலும் கிண்டினன். இப்போது அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று வேலே செய்தது. குழந்தை உள்ளத்திற்குப் பொதுப் படையான பண்டிகையைப் பற்றிய விளக்கம் ருக்மணியினல் ஏற்பட்டுவிடவே, இப்போது ஒரு உரிமை உணர்ச்சி தலே நீட்டியது. உரிமையைக் குழந்தை தனக்குத் தெரிந்தமட்டிலும் கூடப் பிரயோகிக்கத்தான் விரும்பியது.

"அப்பொ நம்மாத்துக்கு யார் கொண்டு வருவா? அப்பாதான் ஊருக்குப் போயிட்டாளே"

"வேறே யாராவது கொண்டு வருவா; நீபோய் விளேயாடு,போ" என்று வலுவில், குழந்தையின் பிரச்னேயைத் தீர்க்க வகையில்லாமலே சொன்னள்.

ராஜப்பாவுக்கு இந்தப் பூடகம் மனதில் பிரமை தட்டச் செய்தது. மணியின் வீட்டில் சங்கராந்தி உண்டு. ஒரு கட்டுக் கரும்பும் ஏராளமான வாழைப்பழங்களும் வந்து சேர்ந்துவிட்டன. இரவு படுத்துத் தூங்கிய பின்னர், மறுநாள் காலே வந்துவிடும். மணி மட்டும் சங்கராந்தி கொண்டாடுவான் .... இந்த விஷயத்தைக் கோவையாகத் தன் குழந்தை மனதால் எண்ணிப் பார்த்தான் ராஜப்பா.

• •

ஒன்றும் புரியாத நிலேயில் குழப்ப மனசுடனே வாசல் பக்கம் போனன். குழந்தைகளுக்கு இயற்கையாக இருக்கும் மனப்பான்மை இது; இதை யொட்டித்தான் அவனுக்கு இப்போது மணியின் வீட்டுப்பக்கம் காலடி எடுத்துவைக்க மனம் வரவில்லே. தன்னேப் பொருத்த ஒரு தாழ்மை மனப்பான்மையால் அவன் மனம் குன்றிப் போயிருந்தது. புதுமைபொங்கி வழியும் முகத்துடன் இருப்பானே மணி என்பதைக் கற்பனே செய்து பார்த்த ராஜப்பாவுக்கு அவனேப் பார்க்கக் கூடாது, அவன் வீட்டிற்குப் போகக்கூடாது என்று தோன்றிவிட்டது.

ருக்மணியின் உள்ளத்தின் ஒரு கோடியில் புகை மூண்டு எழுந்தது. அந்தப் புகையின் பரவலில் சில பழைய சம்பவங்களின் காட்சிகள் பளிச்சென்று தெரிந்தன, ஜ்வாலேபோல.

தன் குழந்தை கண்ணனேப் பறிகொடுத்து விட்டாள் ருக்மணி அந்த வருஷம். கண்ணன் தலேச்சன் குழந்தை; ராஜப்பா இரண்டாவது. வைசூரி போட்டிருந்தது இரண்டு குழந்தைகளுக்குமே. ராஜப்பாவுக்குச் சுலபமாகக் குணமடைந்து விட்டது. கண்ணனுக்கு வைசூரியின் சக்தி பரிணமித்துப் பூரித்துப் போய், கடைசியில் உயிரையே கொண்டு போய் விட்டது. ருக்மணி, வேண்டிக் கொள்ள மறந்துபோனதெய்வமே இல்லே. ஆனல், தெய்வத்தினலும் ஆகமுடியாத காரியமாய்ப் போய் விட்டது கண்ணன் விஷயம்.

கண்ணனும் ராஜப்பாவும் இரட்டைக் குழந்தைகளோ என்று சந்தேகப்படுவர் எல்லோரும். அப்படி வளர்ச்சியில் ஒற்றுமை: உருவ அமைப்பில் ஒற்றுமை: நடை யுடை பாவனேயில் ஒற்றுமை; வயதில்தான் ஒன்று வித்தியாசம்! திருஷ்டியினலேயே கண்ணன் போய்விட்டான் என்றார்கள் சிலர்: எது எப்படியோ, கண்ணன் பொசுப்பில்லே ருக்மணிக்கு; வாரிக் கொடுத்து விட்டாள்.

அவன் நினேவை ராஜப்பாவின் முகத்திலே கண்டு இந்த ஒரு வருஷ காலமாக மனதைத் தேற்றி வந்திருக்கிருள் அவள். இந்தக் காரணத்தினல்தான் இந்த வருஷம் அவர்கள் வீட்டில் சங்கராந்திப் பண்டிகையைக் கொண்டாடுவதில்லேயென்று தீர்மானித்துவிட்டனர்; ராஜப்பாவின் தகப்பனர் எங்கேயோ வெளியூருக்கும் கிளம்பிப் போய் விட்டார்.

ராஜப்பாவின் கேள்விகளால் திணறிப் போன ருக்மணியின் மனசு கரைந்து, கண்கள் அந்தக் காரணத்தினல் நீரை உதிர்த்துக் கொண்டிருந்தன.

* * * * *

வாசலில் நின்று சிறிது நேரம் ஏதோ யோசித்துக்கொண்டிருந்த ராஜப்பாவின் மனதில் ஒரு புது எண்ணம் தோன்றியதுபோலும்; பல திட்டங்களில் உருவான ஒரு முடிவான எண்ணம் அது. அதை மனசுக்குள்ளேயே அமுக்கி வைத்துக்கொண்டான் அவன்.



ராஜப்பா உள்ளே வந்தான். ருக்மணியின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் அவன் மனம் சங்கடப்பட்டது. 'ஐயோ, நாம் சங்கராந்தியைப்பத்திக் கேட்டதும்தான் அம்மா இப்படி அழுகிருள்' என்று எண்ணினன்.

"ஏம்மா அழுறே? சங்கராந்தி நம்மாத்துலே வாண்டாம்மா. நான் கேக்கலே. நீ அழாதே" என்று சமாதானம் செய்தான். குழந்தையுள்ளமானலும், சக்திமட்டிலும் மலேபோன்றது! ருக்மணியின் முகத்தில் சிரிப்பு வந்தது. அவனேக் கட்டி

அணைத்துக்கொண்டே, "நான் அழல்லேயேடா, தங்கம்!" என்றாள்.

பிறகு சிறிது யோசித்துவிட்டு, "ராஜப்பா, நம்மாத்துலே ஏன் சங்கராந்தி இல்லை தெரியுமோ; உன் அண்ணா போன வருஷம் செத்துப் போய்ட்டாண்டா குழந்தை; அதுக்காகத்தான் இல்லை" என்றாள்.

ராஜப்பாவின் மனம் வேலை செய்தது. அண்ணா—கண்ணன்—இறந்துபோன சம்பவம் ஒன்றும் அவன் நினைவில் வரவில்லையெனினும், அதில் பொதிந்துள்ள அர்த்தம் அவன் உள்ளத்தைத் தொட்டு ஒரு அசக்கு அசக்கியதால் சிறிது ஏதோ உணர்ந்தான் என்று சொல்லவேண்டும். அந்த நிலை ஒரு நிமிஷ நேரம் மட்டும்தான். இறந்ததற்குத் துக்கம் கூறும் ஆற்றல் குழந்தை உள்ளங்களுக்கு ஏது? எப்படித் தெரிய வரும்?

மறுபடியும் அவன் மனசில் சங்கராந்திப் பிரச்னை தான்.

"அண்ணா செத்துப் போனா என்னம்மா, அதான் நான் இருக்கேனே?" என்றான் ராஜப்பா.

இது எத்தனை உண்மை. குழந்தை உள்ளத்தில் எழுந்த தூய்மையான உணர்ச்சியில் அப்பட்டமாக எழுந்த உண்மை. துக்கம் காக்கும் சமாதி உள்ளத்துக்கு இது எத்தகைய சவால்!

பெரிய பேரிடிபோன்ற—அனுபவ ஞானியின் உபதேச மொழி போன்ற—இந்த உண்மையை ருக்மணியின் உள்ளம் ஏற்றுக்கொண்டது இந்தக் கேள்வி அவள் மனதில் வளைய வந்துகொண்டேயிருந்தது. காரியங்கள் செய்துகொண்டிருந்தபோதும், சும்மாவிருந்தபோதும், ராஜப்பாவின் கேள்வி மனதில் புகுந்து மனதையும், உள்ளத்தையும், மொத்தத்தில் உடலையும்கூடத் துளைத்துக் கொண்டேயிருந்தது!

* * * *

பொழுது சாய்ந்துவிட்டது. ராஜப்பாவின் மனதிலும் நம்பிக்கை போய்விட்டது. இனி மேல் எங்கே நம் வீட்டிற்கு சங்கராந்தி வரப்போகிறது என்று எண்ணினான்.

அம்பு விட்டாற்போல எதிர் பாராவிதமாக மணி தன் வீட்டினின்றும் வாசலில் வந்து நின்றான். வாசலில் ராஜாப்பாவைக் கண்டதும் அவன் முகத்தில் உற்சாகம் களை கட்டத் தொடங்கியது. பெருமை உள்ளத்திலே பொங்கவிட்டது.

"அப்பறம் ஏண்டா நீ வல்லை எங்காத்துக்கு" என்று கேட்டான் ராஜப்பாவை.

"என்னத்துக்கு வரணும்?" என்று கேட்டான் ராஜப்பா. அவன் குழந்தைதான் என்றாலும், அப்போதைக்கு அவன் மனதில் சுய கௌரவத்தின் முழு உணர்ச்சியும் கூடி அவனை ஒரு அனுபவஸ்தனாக்கியிருந்தது.

"என்னத்துக்குன்னா? மத்தியானம் கரும்பு நறுக்கினா எங்காத்திலே; வந்திருந்தின்னா கொடுத்திருப்பேனேன்னே......" என்றான்.

ராஜப்பா மௌனமாக விருந்தான்.

"நாளைக்கு வரயாடா ராஜப்பா சக்கரைப் பொங்கல் எல்லாம் தரேன்" என்றான் மணி.

"உம்" என்று பெயருக்குத் தலையசைத்துவிட்டு உள்ளே ஓடிவிட்டான் ராஜப்பா.

இந்த சம்பாஷணையை வாசற்படியில் நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள் ருக்மணி.

மணியின் கேள்விகளும், ராஜப்பாவின் மிடுக்கான பதிலும் அவளுக்குப் பெருமையை உண்டாக்கின. தன் மதிப்பும் கௌரவ மனப்பான்மையும் கொண்ட ராஜப்பாவின் போக்கைக் கண்டு வியந்தாள். அவள் மனம் சுற்றியது. இந்தக் குழந்தையை-இரண்டும் கெட்டானை-வஞ்சிக்கிறோமே என்று அவளுக்குத் தோன்றியது.

கடைசியில் ஏதோ தீர்மானம் செய்தவளாக ராஜப்பாவையும் அழைத்துக்கொண்டு வீட்டைப் பூட்டிக்கொண்டு வேலைக்காரியுடன் கடைத்தெருவுக்குக்கிளம்பினாள் ருக்மணி.

* * * *

ராஜப்பா கடைக்குச் சென்று திரும்பி வந்தபோது உற்சாகமே உருவெடுத்து வந்தவன் போலக் காணப்பட்டான். மறுநாள் வரப்போகும் சங்கராந்திக்காக ருக்மணி கரும்பும், வாழைப் பழமும் இன்னும் பல சாமான்களும் வாங்கிக்கொண்டு வந்தாள்.

மணியின் வீட்டில் நடப்பது போல நாளைக்கு நம் வீட்டிலும் சங்கராந்தி நடக்குமென்று எண்ணி வெகுவாகத் திருப்தியடைந்தான் ராஜப்பா.

ருக்மணியின் மனதிலும் சந்தோஷமும், புதுமையும் நிரம்பியிருந்தது. போன குழந்தையை நினைந்து, இருக்கும் குழந்தைக்கு ஒன்றும் செய்யாமல் இருப்பது முட்டாள்தனம் என்று எண்ணினாள். அந்தக் கண்ணனின் ஏகப்பிரதிநிதியாகத் திகழும் ராஜப்பாவின் முகத்தில் பிரகாசத்தைக்கண்டால்போதும், அமரத்வம் பெற்றிருக்கும் கண்ணனின் முகத்தையும் அந்த முகத்தில் திருப்தியின் ஒளியையும் கண்டதுபோலாகும் என்று முடிவு கட்டினாள்.

தன் வீட்டிலும் சங்கராந்தி கொண்டாடத் தீர்மானித்தாள்.

அவள் எண்ணியபடி ராஜப்பாவின் விருப்பப்படியும் அவர்கள் வீட்டில் பொங்கல் பண்டிகை நடந்தேறியது; பால் பொங்கியது. அவர்கள் உள்ளங்களும் பொங்கியது பரவசத்தினால்.

ஒரு கரணைக் கரும்பை நறுக்கி ராஜப்பாவின் கையில் கொடுத்தாள் ருக்மணி; ஒரு துண்டத்தை வாயில் வைத்துக் கடித்தான் ராஜப்பா. அவன் வாயில் தித்தித்தது; அவன் உள்ளமும் தித்தித்தது.



பீப்பிங் சீனுவில் இரண்டாவது பெரிய நகரம். இந்நகரத்திலுள்ள இக்கோட்டையின் மாபெரும் மதிள்களுக்குப் பின்னுல் பொதுவுடமைக்காரர்களிடம் சிக்காமல் தேசியப் படையினர் பின்வாங்கினர். கோட்டைக் கதவுகள் அனைத்தையும் அவர்கள் மூடிவிட்டனர்.

சென்ற மாதம் பெரம்பூர், பைன் ஆர்ட்ஸ் சங்க ஆதரவில் பரத நாட்டியமாடிய ஸ்ரீமதி டி. ஆர். ராஜாமணி.



ஒலிம்பியா, பர்ட்ராம் மில்ஸ் கிறிஸ்மஸ் சர்க்கஸ் காட்சியில் ஒரு பகுதி இது. குடையைக் கையிலேந்தி, குறுக்கு கழியில் லாகவமாக நடந்து வருகிருர்? யார்? முகத்தைப் பாருங்கள்!

அட்டைப்படம்

ஸ்ரீமதி அம்முஸ்வாமிநாதனின் புதல்வியும், ஸ்ரீ. விக்ரம் ஸாராபாயின் மனைவியுமான ஸ்ரீமதி மிருனளினி நடனக்கலையில் விசேஷத் திறமையைப் பெற்றவர். சென்னை அடையாறு கலாக்ஷேத்திரத்தில் அப்பியாசம் பெற்றவர். இந்தியாவில் பிராபல்யமடைந்த இவர் அடுத்த மாதத்தில் மேனாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து இந்திய நடனக்கலையின் சிறப்பை உணர்த்த பாரிஸ், லண்டன், மாஸ்கோ, நியூயார்க், முதலிய இடங்களில் நடன விருந்தளிப்பார். அவரது படமே இவ்விதழின் அட்டையில் தோன்றுகிறது.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

பரிசு - பரிசு - பரிசு

பொங்கல் பண்டிகை சமீபித்துவிட்டபடியால், மகாத்மா காந்திஜியின் ஞாபகார்த்தமாக கைத்தறிகளினால் தயார் செய்த இட்டாலி சில்குகளில் சாரி, சோமன், அங்கவஸ்திரம் ஜனவரி முதல் 30—1—49வரை பரிசு வழங்கப்படும்.

பரிசு திட்டம்

35 ரூபாய் விலையுள்ள 3x8 சில்கு சோமன் ஒன்றும், அங்க வஸ்திரம் ஒன்றும் ரூபாய் 20-க்கும், 24 ரூபாய் விலையுள்ள 6 கெஜம் சில்கு சாரி ஒன்று ரூபாய் 12-க்கும் பரிசு வழங்கப்படும். நபருக்கு ஒன்றுக்குமேல் வினியோகம் செய்யப்படமாட்டாது. இத் திட்டத்தில் சேருபவர்கள் இதைக்கத்தரித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

N. B. டிசம்பர் முதல் ஜனவரி 30 வரை பரிசு திட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு காந்திஜி ஞாபகார்த்த அழகிய சில்கு கர்சீப் ஒன்று இலவசமாக 2-1-49 முதல் அனுப்பிவைக்கப்படும். M. O. அனுப்புவோர் M.O. ரசீதும் அனுப்பவும்.

பெயர்...

ஊர்...

Sri Ram Silk Factory, Kottar (S. Travancore.)

"ஆரூடம்!"

எண்கள் உங்கள் அதிர்ஷ்டத்தை தெரிவிக்கிறது!

உங்கள் எதிர்கால சம்பவங்களை அறிய விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே உங்களுக்குத் தேவையான ஏதாவது உமது எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளை எழுதியனுப்புங்கள். உங்கள் கேள்விகளுக்குச் சரியான பதில் மறு தபாலில் அனுப்பப்படுகிறது.

கட்டணம்: 1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1.
மேல் கேள்வி ஒன்றுக்கு அணா 8.

உமது ஜாதகம் தேவையில்லை. கடிதம் எழுதும் சமயம் உமது மனதுக்குத் தோன்றின ஏதாவது மூன்று நம்பர்களை (லக்ஷத்துக்குள்) தெரியப்படுத்தினால் போதும். தபால் சார்ஜ் தனி. வெளிநாடுகளுக்கு முன் பணம் தேவை. உமது கடிதத்தின் மேல் விலாசம் ஆங்கிலத்தில் எழுதவும்.

மானேஜர், ASTRO - NUMERALOGICAL BUREAU,
11/303, Gwaltoli KANPUR (U.P.)



தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை
கொடுக்கும்

देवामृतम्
'भीम-वीर'
शाश्वत शक्ति
देनेवाला है

RESTORES MAN HOOD

Nectorof Life

MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 8—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500. 1st. Quality Spade Clover Beedies. 500.
SPADE CLOVER BEEDI
M. MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனர் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

உங்கள் எதிர்காலம்



பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர் காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக்கு ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

எல்லோரும் எங்கள்
பீ. எஸ். வஸ்துக்களை
உபயோகியுங்கள்
மணத்திலும், சுவையிலும்
ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் — பாதம் எண்ணெய் — அம்லா ஹேர் ஆயில் — வாசனை தேங்காய் எண்ணெய்-கஸ்தூரிகுங்குமப்பூ-கோரோஜனம் — ஊறுகாய் (பஞ்சாபி); ரோஸ் பஞ்சாபிகுல்கந்து—பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்—ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் — இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115. நைனியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.
போன் நெ. 3432.

9. ஜடாமுனி கோவில் தெரு.
மதுரை.

வெட்டுகள், காயங்கள், புண்கள் & ரணங்கள்

உலகப் புகழ்பெற்ற ஜாம்-பெக் உபயோகித்தால் குணமடையும்

உலகின மிகச் சிறந்த கிருமிநா மருந்து ஜாம்-பெக் அதன் மருந்து எண்ணெய்கள சருமத்துக்குள் புகுந்து வேலை செய்வதால்வேகமாகவேதனை வாரணைமளிக்கும் பாதிக்கப்பட்ட கிரந்திகளுக்கு ஜாம்-பெக சமனமூட்டி விஷம் தீண்டப்பட்டு கிருமி நிறைந்த சருமத்தை சுத்தப்படுத்தி குணமாக்கும். மிருகக்கொழுப்பில்லாததற்கு உத்தரவாதர்

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

சருமநோய்கள், காயங்கள். பூச்சி கடிகள். புண்ணுகி வலிக்கும் கால்கள். தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது

Zam-Buk

சமனமூட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து

ஏஜண்டுகள். மெஸர்ஸ் தாதா & கம்பெனி பி டி மதராஸ்.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம் மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானல், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானல் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்பசித்து வெற்றிபெற்ற ஒரு மகானல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936)

ஜாதகம் ! ஆரூடம் !!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ.35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், **வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. S

நிபுணர் ஒரு நடிகர்

மீன் விழுங்கி சாமியார்.

வைரம் வாங்கும் விஷயத்தில் நிபுணரின் யோசனையை எவ்வளவு சுலபமாக காசில்லாமலேயே—பெற விரும்புகிறீர்கள் ?

ஆனால்.........நிபுணர் மட்டும் ஏமாந்தவரா—நடிப்பில் கைதேர்ந்தவருக்கு உங்களை மயக்குவது ஒரு நிமிஷ வேலையே...எல்லாம் மோசடிதான்......... உங்கள் நலனுக்காகவே அவர் தமது நிபுண (!) யோசனையை தயவுடன் வெளியிடுவதாக உங்களை எளிதில் நம்பச்செய்கிறார்.

இந்த ஜோடியின் பொருத்தத்தைக் கவனித்தீர்களா ? ஒன்று — வைரம் வாங்குபவர்; நிபுணரிடம் தமக்குள்ள சொல்ப தொடர்பை உபயோகித்து அவரிடம் இலவச யோசனை பெற விரும்புகிறார். நிபுணரோ வாங்குபவரின் மானஸிகத் தொடர்பை ஞாபகப்படுத்தி தாம் சுயலாபங்கருதாமல் பாரபக்ஷமற்ற யோசனையைக் கூறுவதாக நம்பச்செய்கிறார் !

நரியும் நாரையும்

போலி வேஷத்தில்

நிபுணர் யாதொரு முதலுமின்றி லாபமடிப்பவர்—சரக்குமில்லை யாதொரு பயமுமில்லை. வெறும் ஏமாற்று வார்த்தைகளைக்கொண்டு பிழைப்பவர். அவநம்பிக்கை கொண்டவர்களிடம் நாரையைப்போன்று நடித்துப் பயனடைவது அவரது தப்பு அல்ல.

தரக நிபுணரும், வியாபாரியும் சேர்ந்து உங்கள் பாட்டுக்குத் தகுந்த நாட்டியமாடி தமது வியாபார தந்திரத்தைக் கையாள்வது சரியே. இதற்கு மூலகாரணம் நீங்களேதான்.

நாணயத்திற்குப் பிரக்யாதி பெற்று நிலைத்து வியாபாரம் செய்யும் நம்பிக்கையான நகை வியாபாரியிடம் நம்பிக்கை வைத் வாங்குவது சாத்தியம். சுய தாலதான பகுதிவற வைரம் லாபமே கண்ணாயிருக்கும் நம்பினால் விலை உங்கள் தேடுகிறீர்கள். நாகரது மோச வார்த்தைகளை பணத்திற்கே நஷ்டத்தை

மிக உயர்வான ரகங்கள்

ஸூரஜ்மல்ஸ்

1895 முதல் நாணயத்திற்சிறந்த நகைவியாபாரிகள்

313, எஸ்பிளனேட் — மதராஸ்.